கிழக்கெங்கும் பயணிக்கவுள்ள மலைமுரசு
50 வது இதழில் இருந்து

ஆனி மாதம் 15ம் திகதி
June 29, 2013

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 49
MALAIMURASU
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்
வார இதழ்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

# 13 ஐ ஒழிக்கும் முயற்சியை கைவிடவும்: திருமலை நகர சபையில் தீர்மானம்

13 ஆவது அரசமைப்புச்-சட்டத் திருத்தத்தை ஒழிக்கும் முயற்சியைக் கைவிட்டு தமிழ் பேசும் மக்களுக்கு நிலைத்து நிற்கக்கூடியதும் நியாயமானதுமான அதிகாரப்பகிர்வை வழங்கி அம்மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யும்படி திருகோணமலை நகரசபை சனாதிபதி மஹிந்த ராஜபக்சவைக் கோரியுள்ளது. கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற திருகோணமலை நகரசபையின் ஜுன் மாதக்கூட்டத்தில் இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மாதாந்த கூட்டம், நகரசபைத்தலைவர் க. செல்வராசா தலைமையில் நடைபெற்றபோது இப் பிரேரணையை உறுப்பினர் கோ. சத்தியசீலராஜா முன்மொழிந்தார் உறுப்பினரான த. கௌரிமுகுந்தன் பிரேரணையை வழிமொழிந்தார்.

திரு.சத்தியசீலராஜா பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றுகையில் கூறியதாவது "1987 ஆம் ஆண்டு ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்படிக்கையின் கீழ் கொண்டு

7

# கிழக்கு மாகாண முதலமைச்சரையும், ஆளுனரையும் மாற்ற முடியாது – சனாதிபதி

## நீளுமா இழுபறி

கிழக்கு மாகாண ஆளுனர் அட்மிரல் மொகான் விஜேவிக்ரம மற்றும் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் ஆகியோரை மாற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லையென சனாதிபதி மகிந்த ராஜபக்ஸ திட்டவட்டமாக எடுத்துரைத்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையில் தேவையற்ற பிரச்சனைகளை தோற்றுவிக்கும் அமைச்சரொருவரை தற்போதைக்கு மாற்ற வேண்டிய நிலை தோன்றியுள்ளதாகவும் சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். கிழக்கு மாகாண ஆளுனர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரை நேற்று...

7

# கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகில் விகாரை அமைக்கக் காணி

உலகப் புகழ்பெற்ற திருகோணமலையின் கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகில் விகாரை அமைப்பதற்கென ஒரு ஏக்கர் காணியை அரசாங்கம் வழங்கியிருப்பது வெளியாகியுள்ளது.

கன்னியா வெந்நீரூற்றுக்கு பின்புறமாக இவ்விகாரை அமைப்பதற்கான காணி வழங்கப்..

7

# புதிய தொழில்நுட்ப பாடம் கற்பிக்கத் தெரிவானது விபுலானந்தா கல்லூரி

உயர் தரப்பிரிவில் புதிதாக அறிமுகம் செய்யப்படவுள்ள தொழில்நுட்பப் பாடப் பிரிவினை கற்பிப்பதற்காக நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்டுள்ள பாடசாலைகளுள் கிழக்கு மாகாண தமிழ்ப்ப பாடசாலைகள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

7

# வலைப்பந்தாட்ட தேசிய அணியில் திருமலையின் அஷ்வினி

புரூணைக்கு பயணமாகியுள்ள இலங்கை இளையோர் தேசிய வலைப்பந்தாட்ட அணியில் திருமலையின் இளைஞி பாக்கியராஜா அஸ்வினியும் இணைக்கப்பட்டுள்ளார். கடற்படை மகளிர் வலைப்பந்தாட்ட அணியின் முக்கிய வீராங்கனையான அஸ்வினி 15 வயது முதல் வலைப்பந்தாட்டத்தில் ஈடுபட்டு-வருவதுடன் தனது பாடசாலையான புனித மரியாள் கல்லூரியின் 15, 17, 19 வயது அணிகளில் விளையாடிப் பெருமை சேர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



இவருடன் யாழப்பாணத்தைச் சேர்ந்த பரமலிங்கம் வேணிஜாவும் இவ்வணியில் இடம்பிடித்துள்ள தமிழர் ஆவார்.

இலங்கையின் அணி எட்டாவது ஆசிய இளையோர் வலைப்பந்தாட்ட போட்டிகளில் மலேசியா, இந்தியா, ஹொங்-ஹொங், புரூணை, ஜப்பான், ஆகிய அணிகளை பிரிவு ஏ யிலும், சிங்கப்பூர், தாய்லாந்து, மாலைதீவு, நேபாளம் ஆகிய அணிகளுடன் பி பிரிவிலும் மோதவுள்ளது.

மலைமுரசின் புதுமுகம்...
கிழக்கெங்கிலும் புதிய பிரவாகம்
முரசின் புது முழக்கங்கள்
சர்வதேசச் செய்திகள்
விளையாட்டுச் செய்திகள்
தீன்முரசு – மார்க்கச் செய்திகள்
உள்ளூர் அரசியல் நிலவரங்கள்
கல்விமுரசு – பரீட்சை வழிகாட்டல்கள்
சினிமுரசு – சூடான சினிமாச் செய்திகள்
மாணவர் முரசு
50 வது இதழிலிருந்து
16 பக்கங்கள்
இரு நிறங்கள்
மாணவர்களே,
காத்திரமான படைப்புகளை அனுப்பி வையுங்கள்.
விலை 25
உங்கள் படைப்புகளுக்கு தன் பக்கங்களில் களம் தர மலைமுரசு தயாராக உள்ளது

## ஆசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்




நவகத்தேகம பிரதேசத்தில் ஆசிரியை ஒருவரை முழந்தாளிடச் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருமலை ஆசிரியர்கள் கண்டன ஈர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடாத்தியுள்ளனர்.

கல்வி அமைச்சின் முன் நடாத்தப்பட்ட இப் போராட்டத்தினை இலங்கை ஆசிரியர் சங்க திருமலை ஆசிரிய அங்கத்தவர்கள் நடத்தியுள்ளனர். (கதிரவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

### 13 தி இருப்பும், அழிப்பும்!

13வது திருத்தச் சட்டத்தின் மீதான வாதப் பிரதிவாதங்கள் கடும் போக்கில் உலாவத் தொடங்கி விட்டன. இலங்கையின் சனாதிபதிகளிற் சிலர் "உண்மையிலேயே இலங்கையில் இனப்பிரச்சனை உண்டு" என்பதை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் மிகக் குறைந்தளவுக்குப் பொருத்தமான தீர்வொன்றைச் சிறுபான்மைச் சமூகங்களுக்கு வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளின் அதிகாரங்களை எழுத்தாலான சட்டமாக்கிய போது உருவான அரசியலமைப்பின் திருத்தச் சட்டமே 13வது திருத்தம்.

அத் திருத்தச் சட்டத்திலுள்ள அதிகாரங்களை குறைக்கும் நடவடிக்கைகளை முன்னனை அரசுகளும் மேற்கொண்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக தற்போதைய அரசும் சிறுகச் சிறுக அவ் அதிகாரக் காகிதங்களை செல்லரிக்கத் தொடங்கியுள்ளது.

எவ்வளவுதான் எதிர்த்தாலும், இந்தியா எதிர்த்து நின்றாலும், இன்று அல்லது எதிர்வரும் காலங்களில் இலங்கையின் அரசு அதனை நிறைவேற்றியே தீரும்.

ஆனால் அதனை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு பின்பற்றப் போகும் வழிதான் மாறுபடும். ஒட்டுமொத்தமாக 13 தி யை இலங்கை அரசு இல்லாமற் செய்யப் போவதில்லை. அதற்குப் பதிலாக சிறுகச் சிறுக அச்சட்டமூலத்திலுள்ள அதிகாரப் பகிர்வுகளை வேறு சட்டங்கள் ஊடாக மத்திய அரசிற்கு மாற்றிக் கொண்டாலே போதும். 13 தி செத்துவிடும். இது ஒன்றும் பெரிய விடயமல்ல. ஒரு கோட்டை எதுவும் செய்யாமலே சின்னனாக்கிவிட மற்றொரு கோட்டை வரையும் தந்திரோபாயம் தான்.

13 தியின் இருப்பால் தமிழருக்கு என்ன இறுதியாகக் கிடைத்திருக்கின்றது என்று கணக்கிட்டால் செலவுக் கணக்கு மட்டும் எஞ்சிக் கிடப்பதைப் புரிய முடிகின்றது. இந்து சமயத்தவர் வரலாற்றுக் காலந்தொட்டு வணங்கி வந்த வணக்கத் தலங்களில் கூட நடைபெறும் ஆக்கிரமிப்புக்களை 13 தி யால் நிறுத்த முடியாதுள்ள போது அதன் பயன் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆனால் அப் 13 தியையும் விட்டு விட்டால் அப்பால் எமக்கு எஞ்சப் போவது என்னவோ "உங்களைக் கைவிட மாட்டோம்" என்ற வெறும் வாக்குறுதிகள் மட்டும் தான்.

தற்போது என்ன செய்ய வேண்டும்? 13தி யைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதே வேளையில் எமது அரசியல் தலைமைகள் கூடிப் பேசி 13 தி இல்லாது போகும் பட்சத்தில் எதைப் பற்றிக்கொண்டு நாம் நிற்க வேண்டும் என்பதை இப்போதே தீர்மானித்துவிட வேண்டும்.
தீர்மானிப்பார்களா?

ஆ-ர்

## ஈச்சந்தீவில் களியாட்டக் களமாக கைவிடப்பட்ட கட்டிடம்



ஈச்சந்தீவின் பழமை வாய்ந்த கட்டடமே இது. சுமார் 35 வருடங்களுக்கு முற்பட்ட இது கிண்ணியா நகர சபைக்குட்பட்ட V.C. அலுவலகமாகும். Village Council என்றழைக்கப்படும் இது 1990 ஆம் ஆண்டு வரை செயற்பட்டு வந்தது. அதன் பின்னர் இடம்பெற்ற வன்செயல் காரணமாக தற்காலிகமாக அலுவலகம் மூடப்பட்டது. இருப்பினும் 1990 ஆம் ஆண்டிலிருந்து அந்தக் காணியையும் கட்டடத்தையும் பாதுகாப்புத் தரப்பினர் கம்பி வேலிகளைப் போட்டு பாதுகாப்பு முகாமாக்கியிருந்தனர். இவ்வருட தொடக்கத்தில் அங்கிருந்து விலகினர். அதன் பின்னர் அக்கட்டடம் வெறுமனே காணப்படுகிறது. காணியைச் சுற்றியிருந்த முட் கம்பிகளும் மரக்கட்டைகளும் இனந்தெரியாதோரால் சூறையாடப்பட்ட நிலையில் பகல் வேளைகளில் சிறுவர்களின் விளையாட்டு மைதானமாக மாறியுள்ளது. அது மட்டுமன்றி சில விரும்பத்தகாத நடவடிக்கைகளும் இங்கு இடம்பெறுவதாக தெரியவருகின்றது. இரவு வேளைகளில் ஒரு சிலர் காதல் களியாட்டங்களில் ஈடுபடுவதாகவும் நள்ளிரவின் பின் சில சமயங்களில் கசிப்பு விற்பனையும் நடைபெறுவதாகவும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான செயற்பாடுகளை விரைவில் தடுத்து நிறுத்த வேண்டும். இவ் ஊரில் தலைமைப் பதவியிலுள்ளவர்கள் கிண்ணியா நகர சபையுடன் தொடர்பு கொண்டு மீண்டும் இவ்வலுவலகம் செயற்பட உறுதுணையாக இருக்க வேண்டும். இல்லையேல் ஈச்சந்தீவின் பெயர் மற்றவர்களால் கொச்சைப்படுத்தப்படும் நிலை உருவாகுமென ஊர் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

## இடைநடுவில் வாய்க்கால்

கயல்வந்தான் குளத்திலிருந்து காளிக்குட்டியாகுளம் வரை அம்மன்நகரை ஊடறுத்து வெட்டப்பட்டு இடைநிறுத்தப்பட்ட கால்வாய் தற்பொதுள்ள நிலையையே படத்தில் காண்கின்றீர்கள் .

இது சில சமயம் கால்நடைகளுக்கும், மனிதர்களுக்கும் சவக்குழியாகவும் அமையலாம். காரணம் எந்த பொறியியல் ஆலோசனைகளோ, மேற்பார்வைகளோ, திட்டமிடல்களோ இல்லாமல் வெட்டப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளது எனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.



## திருமலைக்குப் புதிய காவல்துறை மா அதிபர்

திருகோணமலைப் பிராந்தியத்திற்குப் பொறுப்பாக புதிய பிரதிக் காவல் மா அதிபராக கபில ஜெயசேகர 27.06.2013 அன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
கொலைக் குற்றச்சாட்டுச் சந்தேகத்தின் பெயரில் கைதாகியுள்ள வாஸ் குணவர்த்தனவின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திருமலையின் தற்போதைய பிரதிக் காவல்மா அதிபர் திரு. எல்.ஜி. குலரத்ன அவர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே திருமலைக்குப் புதிய காவல் துறை மா அதிபராக கபில ஜெயசேகர இடமாற்றப் பட்டுள்ளார்.



## அரிமா கழக புதிய நிர்வாகிகள் பதவியேற்றனர்

திருகோணமலை கிங்கோ அரிமா கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிறீன் வீதியில் அமைந்துள்ள சண்சைன் விடுதியில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக அரிமாக் கழகத்தின் மாவட்ட ஆளுனர் தேச பந்து. பா. ஜனரஞ்சன் கலந்துகொண்டார். இவ்வருடத்துக்கான புதிய தலைவராக கே. குலதீபன் பதவி ஏற்றதோடு புதிய அங்கத்தவர்களாக தெரிவுசெய்யப்பட்ட ஆறு உறுப்பினர்களுக்கும் சின்னம் சூட்டப்பட்டதோடு கடந்த வருடம் நடைபெற்ற கழகத்தின் செயற்பாட்டில் அதிகப்படியாக பங்கேற்றவர்களுக்கு அரிமா மாவட்ட ஆளுனர் விருதுகள் வழங்கப்பட்டன.



## வடமாகாணசபைத் தேர்தல் களம்

### நான் போட்டியிட மாட்டேன் – கே.பி

வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் தனக்கில்லை என விடுதலைப் புலித்தலைவர்களில் ஒருவரான குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி. தெரிவித்துள்ளார்.

### மு.கா. தனித்துப் போட்டி

வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் தற்போதுவரை எவ்வித கூட்டணியுமின்றித் தனித்துப் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

### வெற்றிலை தனியே – வீணைக்கு அதிர்ச்சி

வட மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் முடிவை வெற்றிலை அணி மேற்கொண்டதால் வீணை அணி பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளது.

தற்போதுவரை டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் சனநாயகக் கட்சியின் ஆதரவுடனேயே வடக்கில் விசேடமாக யாழ்பாணத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி முன்னெடுத்து வந்துள்ளது.

எனினும் 13வது திருத்தம் தொடர்பாக தனது அதிருப்தியை வெளிப்படையாக டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரியப்படுத்தியிருந்தார். அதன் விளைவாகவா ஆளும் முண்ணனி தான் வீணையுடன் இணையாமல் தனித்துப் போட்டியிடும் முடிவை மேற்கொண்டிருக்கின்றது எனத் தெரியிவில்லை.

### வடக்குத் தேர்தலுக்கு முன் இராணுவ ஆளுனரை மாற்றுக. – ஸ்ரீதரன் பா.உ -

செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள வடமாகாணசபை தேர்தலுக்கு முன் வடக்கின் ஆளுனரை பொதுச் சேவை அதிகாரி ஒருவரால் மீள்நிரப்புமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போதைய ஆளுனராக முன்னாள் வடமாகாண இராணுவ தளபதி ஜீ.ஏ. சந்திரஸ்ரீ அவர்களே பதவி வகித்து வருகின்றார். வடமாகாண சபைத் தேர்தலில் அவரது ஆதிக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் அத்தேர்தல் நியாயமானதாகவும் நேர்மையானதாகவும் நடைபெறுவது சந்தேகமே என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

### வடக்கு மக்கள் அதிகாரங்களையும் உரிமைகளையும் அனுபவிக்கக் கூடாது என்பதே அரசின் திட்டம்: சுமந்திரன் எம்.பி.

வட மாகாண மக்கள் மாத்திரம் மாகாணசபையின் அதிகாரங்களையும் உரிமைகளையும் அனுபவிக்க விடக் கூடாது என்பதற்காகவே அரசாங்கம் இன்று 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிரான நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளது என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமுரசு

# செய்திக் குறிப்புகள்

## கசினோக்கள் தடைசெய்யப்பட வேண்டும் – ஜம்இய்யத்துள் உலமா




நாட்டில் அதிகரித்து வரும் கசினோ சூதாட்ட நிலையங்கள், மதுபான விற்பனை நிலையங்கள் என்பன எதிர்கால சந்ததிகளின் ஒழுக்க விழுமியங்களை பாதிக்கும் என்பதால் இவை முற்று முழுதாக தடை செய்யப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்க அகில இலங்கை ஜம் இய் யத் துல் உலமாசபை நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

சகல சமயங்களிலும் தடுக்கப்பட்டுள்ள இப்பாவச் செயல்கள் சமய ஒழுக்கங்களை பாரிய அளவு பாதிப்பதால் இவை எக்காலத்திலும் அனுமதிக்கப்பட முடியாதவையாகும். சுபீட்சமான வாழ்க்கையை எதிர்பார்க்கும் ஒவ்வொரு பிரஜையும் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதிக்கும் இவ்வாறான செயற்பாடுகளை தடை செய்ய வேண்டும்.

## ஒரே பால் துணையைத் தடுத்தது இலங்கை அரசு

புதிதாகப் பதிவியேற்றுள்ள நோர்வேயின் தூதுவரால் இலங்கை அரசு பிரச்சனையொன்றை எதிர்கொண்டுள்ளது. நோர்வேத் தூதுவரான கிரெட்டி லொசன் ஒருபால் கவர்ச்சி கொண்டவர். அவர் நோர்வேயில் மற்றொரு பெண்ணைத் திருமணம் முடித்து வாழ்கின்றார். நோர்வேயில் ஓர்பால் புணர்வும் திருமணமும் சட்ட அங்கீகாரம் கொண்டிருப்பதால் அங்கு எப் பிரச்சனைகளையும் அவர் எதிர்கொள்ளவில்லை.

ஆனால் அவர் நோர்வேயின் தூதராக இலங்கைக்கு நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து தனது வாழ்க்கைத் துணையை இலங்கைக்கு அழைத்து வருவதில் பிரச்சனைகளை எதிர் கொண்டுள்ளார். ஏனெனில் இலங்கையில் ஓர்பால் புணர்வும் திருமணமும் சட்ட விரோதமானவை என்பதாலேயே இப்பிரச்சனை எழுந்துள்ளது.

நோர்வேத் தூதுவரின் வாழ்க்கைத் துணையான மற்றொரு பெண்ணை இலங்கைக்குள் அனுமதிப்பதில்லை என இலங்கை இறுதியாக முடிவெடுத்துள்ளது.

## இந்தியாவின் நிலைப்பாட்டைப் பற்றிக் கவலையில்லை

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் விடயங்களில் இலங்கையால் தன்னிச்சையாகவே மாற்றம் செய்யப்பட முடியும் என உயர் வட்டாரங்கள் கருதுவதாக திவயின செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

அம்மாற்றங்களுக்கு இந்திய நிலைப்பாட்டையோ அவர்களின் ஆதரவையோ பெறத் தேவையில்லை என அவ்வுயர் அரசியல் வட்டாரங்கள் கருதுவதாகவும் இலங்கை இறைமையுள்ள தன்னாட்சி அதிகாரம் கொண்ட நாடாக இருப்பதால் இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பாக எவ்வித கலந்துரையாடல்களையும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் உடன் மேற்கொள்ளப் போவதில்லை என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என அச் செய்தித் தாள் தெரிவித்துள்ளது.

## பொசன் போயா உணவுத் தானத்தில் கோழி புரியாணி – கடுப்பாகிப் போனது இராவண பலய

பொசன் போயா தினத்தை முன்னிட்டு தானமாக வழங்கப்பட நூற்றுக்கும் மேற்பட்ட கோழிகளை அறுத்து புரியாணி தயாரிக்கப்பட்டுள்ளதாக இராவண பலய விற்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலை அடுத்து களத்தில் இறங்கிய இராவண பலய அமைப்பினர் தானம் நடைபெற்ற இராஜசிரிய பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அங்கு தானம் நடைபெறும் ஏற்பாடுகளை கண்ணுற்ற அவர்கள் அதனைத் தடுப்பதற்கு முயற்சித்த வேளை அத்தானம் போயா தினத்திற்கானதல்ல என்றும் தனிப்பட்ட தானம் என்றும் தானத்தை ஏற்பாடு செய்திருந்தவர் தெரிவித்துள்ளார்.

எனினும் சந்தேகங்கொண்ட இராவண பலய அமைப்பினர் காவல்துறையில் முறைப்பாடொன்றை செய்துள்ளனர்.

## சூதாட்ட, கசினோ மற்றும் சாராய அனுமதிப் பத்திரங்களை 2005 இன் பின் வழங்கவில்லை – ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

2005ல் பதவியேற்றபின் புதிதாக கசினோ, சூதாட்ட மற்றும் சாராய அனுமதிப் பத்திரங்கள் எவற்றையும் இவ் அரசு புதிதாக வழங்கவில்லை என சனாதிபதி தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை ஊடகத்துறை தலைவர்களுடன் காலை ஆகாரத்தைப் பகிர்ந்து கொண்ட சனாதிபதி பேசிய போது இந்த அனுமதிப் பத்திரங்கள் யாவும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்டவை என தெரிவித்தார். பொது இடங்களில் புகைத்தலைத் தடுத்த அரசு என்னுடையது என தெரிவித்த அவர் சட்டவிரோத சூதாட்ட நிலையங்களை சுற்றிவளைப்புக்கு உட்படுத்துவதாகவும் தெரிவித்தார். பாரிய ஹொட்டல் கட்டுமான அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசு அனுமதிப்பதால் கசினோ சூதாட்ட நிலையங்களும் இலங்கையில் பரவிவிடும் என்ற வதந்தி பொய்யானது என அவர் மேலும் தெரிவித்தார்.

## வறுமை மட்டம் குறைகிறது

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் 2012ஆம் ஆண்டுக்கென தயாரித்து வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 2006, 2007 களில் 15.2 வீதமாக இருந்த வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் தொகை 2012இல் 6.5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என தெரிய-வருகிறது. மலை நாட்டில் 32 வீதமாக காணப்பட்ட இத்தொகை தற்போது 11.4 வீதமாக இருப்பதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது. வருமானச் சமமின்னை 0.04 வீதத்தால் வீழ்ச்சியடைந்து தற்போது 0.36 வீதமாக உள்ளதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது.

## இலங்கையை விட்டு ஓடிய 20 பத்திரிகையாளர்கள்

20க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் ஜுன் 2008ம் ஆண்டிலிருந்து மே 2013 வரைக்குமான காலப்பகுதியில் சுமார் 20க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் தப்பியோடியுள்ளனர் என ஊடகவியலாளரைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது. இவ்வமைப்பின் தகவல்களின் படி 26 பேர் இலங்கையை விட்டு தப்பியோடியுள்ளனர். கொலைகளுடன் தொடர்புடைய விசாரணைகளை புலனாய்வு செய்த பத்திரிகையாளர்கள் தற்போது இலங்கையில் இல்லை என அவ்வமைப்பு தெரிவித்துள்ளதுடன் கொல்லப்பட்ட சுமார் 9 பத்திரிகையாளர்களின் விசாரணைகளை உடப்பில் போடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது. கடந்த வருடம் இலங்கை அரசாங்கம் செய்திகள் வெளியாவதைத் தடுப்பதில் கடும் போக்கைக் கொண்டிருந்தது என்றும் தகவலறியும் சட்டத்தை பாராளுமன்றத்திற்குக் கொண்டுவராது தடுத்துவிட்டது என்றும் கூறியுள்ளது.

## ஓய்வு பெற்றவர்கள் மீள் நியமனம் – இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

ஓய்வுபெற்ற கல்வி நிர்வாக சேவை அலுவலர்களை மாகாணக் கல்வித் திணைக்களங்களில் மீளப் பணிக்கமர்த்தும் அரசின் முடிவை வன்மையாகத் இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டித்துள்ளது.

தகமை கொண்ட அலுவலர்கள் தற்போது சேவையில் இருக்கின்றபோதும் அவர்களைக் கருத்திற்கொள்ளாது ஓய்வு பெற்றவர்களை மீளப் பணிக்கமர்த்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது என அச் சங்கத்தின் தேசிய செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண கல்வித் திணைக்களத்தில் நிலவும் கல்வி நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கையாக ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்றவர்களை நியமிக்க முனைப்புக் காட்டப்பட்டு வருகின்றது.

## வடமாகாண சபைத் தேர்தல் – சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேர்முகத் தேர்வு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் நேர்முகத் தேர்வு சனிக்கிழமை நடந்துள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலிருந்து விண்ணப்பித்திருந்த ஐம்பது பேர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

## மாற்றுத்திறனாளிகள் பொது நிதியத்தின் கலந்துரையாடல்

புல்மோட்டை மாற்றுத்திறனாளிகளுக்கான பொது நிதியத்தின் கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை புல்மோட்டை நூலகக் கேட்போர் கூடத்தில் குச்சவெளிப் பிரதேச தவிசாளர் ஏ. முபாறக் தலைமையில் நடைபெற்றது இக் கலந்துரையாடலில் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர்களான எச்.எம். சல்மான் பாரிஸ், ஐ. பதுர்தீன், பொதுநிதியத்தின் தலைவர் ஏ.சி. அப்துல் ஹாலித், பொருளாளர் ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## வர்ண மீன்களைப் பிடிப்பவர் மரணித்தார்

திருகோணமலை பூம்புகாரைச் சேர்ந்த நாற்பது வயதான காளி பூமிநாதன் வர்ண மீன்களைப் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணமடைந்துள்ளார். வர்ண மீன்களைப் பிடித்துக்கொண்டிருக்கும்போது ஒக்சிசன் வாயு கசிந்து உடலுக்குள் சென்ற காரணத்தினாலேயே மூச்சுத்திணறல் ஏற்பட்டிருக்கலாம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் மரணமடைந்தவருடன் மீன்பிடிக்கச் சென்ற ஏனைய இருவரிடமும் காவல்துறை விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மீண்டும் நுளம்பு வலைகள்

திருகோணமலையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மடத்தடி மற்றும் வீரநகர் பகுதியிலுள்ள சுமார் 600 குடும்பங்களுக்கு இலவச நுளம்பு வலைகள் வழங்கிவைக்கப்பட்டன. கடந்த வியாழக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சபீகா மன்சூர் தலைமையில் இந்நிகழ்வு திருகோணமலை நகரசபை தீயணைப்பு நிலையத்தில் இடம்பெற்றது.

## மூதூர் காவல்துறைநிலையப் பொறுப்பதிகாரி இடமாற்றம்

மூதூர் காவல் நிலையத்தின் பொறுப்பதிகாரியான சிரேஸ்ட காவல் பரிசோதகர் பத்மலால் அவர்கள் கொஸ்கொட காவல் நிலையத்திற்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மூதூரின் வெற்றிடத்திற்கு கொஸ்கொட காவல் நிலையப் பொறுப்பதிகாரி லால் உடகம நியமிக்கப்பட்டுள்ளார்.

## பாண் வண்டி மோதி சிறுவன் படுகாயம்

ஈச்சிலம்பற்று பூநகர் பிரதேசத்தில் 27.06.2013 அதிகாலை ஐந்து மணியளவில் பாண் ஏற்றிச் சென்றிருந்த முச்சக்கரவண்டி தெருவில் படுத்திருந்த சிலரை மோதிக் கவிழ்ந்துள்ளது. இவ் விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களுள் மிகப் படுகாயமடைந்த 15 வயதான சுரேஸ்குமார் என்ற சிறுவன் மட்டக்களப்பு வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கடந்த வாரங்களைப் போன்றே இளைஞர் பாராளுமன்றின் விடயங்கள் தொடர்பாக தொடர்ந்து நகரலாம்*

# இலங்கை இளைஞர் பாராளுமன்றம் தெளிவும்.. நோக்கமும்.. – 4

## பாராளுமன்றின் பதவிக்காலம்

இப்பாராளுமன்று ஒரு வருடகாலத்தை தனது பதவிக் காலமாக கொண்டுள்ளது. எனினும் கடந்த முதலாவது பாராளுமன்றம் இரண்டு வருடகால பதவிக்காலத்தைக் கொண்டிருந்தது.

## உறுப்பினர்களின் பதவிக்காலம்

இப் பாராளுமன்றினது பதவிக்காலமான ஒரு வருடத்திற்கு உறுப்பினர்கள் அனைவரும் பதவியில் இருக்கலாம். எனினும் உறுப்பினர்களின் நன்நடத்தை மற்றும் செயற்பாடுகள் அவர்களது பதவிக்காலத்தில் செல்வாக்குச் செலுத்தும். மேலும் பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோரது பதவிக்காலத்தில் சபையின் நம்பிக்கைத் தன்மை செல்வாக்குச் செலுத்துகின்றது.

## உறுப்பினர்களின் கொடுப்பனவு

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த ஆண்டு வழங்கப்பட்டதைப் போன்று போக்குவரத்துக் கொடுப்பனவாக சிறிய தொகை வழங்கப்படுமெனத் தெரிகிறது. ஏனெனில் கடந்த பாராளுமன்று உறுப்பினர்களுக்கும் போக்குவரத்துக் கொடுப்பனவைத் தவிர வேறு மேலதிக கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் தேர்தல் முறைமை மற்றும் தெரிவு முறைமைகள் காலவரையறை பற்றி விளங்கியிருந்தோம். இனி இப்பாராளுமன்றின் செயற்பாடுகள் எத்தகையனவாக இருக்கப்போகின்றன என்பதை தொடர்ந்து நோக்கலாம்.

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்ட இவ் இளைஞர் பாராளுமன்றம் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு குறித்த பகுதிகளில் இளைஞர் சேவைகளை மேம்படுத்தும் அடிப்படைத்திட்டங்களை மேற்கொள்ளுதல் இதன் பிரதான நோக்காக கருதப்படுகிறது. எனினும் மிக முக்கியமாக தேசிய பாராளுமன்றில் கொண்டுவரப்படும் சட்டங்கள் பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பாகவும் விவாதிக்கும் உரிமையும், பிரதேச செயலாளர்பிரிவுகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக இளைஞர் பாராளுமன்றில் விவாதிக்கும் உரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ் உள்ள இளைஞர் சேவைகள் மன்றத்தினதும், இளைஞர் கழகத்தினதும் பிரதிநிதி என்ற வகையில் தேசிய ரீதியில் தொடர்புகளை மேற்கொண்டு கடமையாற்றல் என்பன இவ் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமைகளாகவும் கொள்ளப்படுகிறது.

எனினும் இப் பாராளுமன்றில் இயற்றப்படும் சட்டங்கள் இளைஞர் கழகங்களுக்கென மட்டுப்படுத்தப்பட்டனவாக இருக்குமே தவிர தேசிய சட்டங்களோடு ஒப்பிடும் அளவுக்கு வலிதானவையாக இருக்க மாட்டாது. அதுபோல் இலங்கையின் தேசிய கொள்கையில் அல்லது இலங்கை அடிப்படை யாப்பைப் பாதிக்கும் எவ்வித சட்ட மூலங்களையும் இச் சபையில் சமர்ப்பிக்க இயலாது.

இங்கு சமர்ப்பிக்கும் சட்ட மூலங்கள், கலந்தாய்வுகள் இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்டு தேசியத் திட்டமிடலின் போது கவனத்தில் கொள்ளப்படும் எனத் தெரிகின்றது.

*இத்தகைய நிலையில் செனட் சபை ஏன் என்ற கேள்வி பரவலாக எழுகின்றது.*

செனட் சபை 77 உறுப்பினர்கள் நேர்முகத் தெரிவின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எனினும் இவர்களுக்கென்று தனி மன்ற முறைமையோ, அமர்வு முறைமையோ காணப்படாமல் ஏனைய பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களுடனேயே சேர்ந்து செயலாற்ற வேண்டிய நிலை காணப்படுகிறது.

இலங்கை தேசிய பாராளுமன்றில் செனட் சபையின் தேவையை உணர்ந்து கொள்வதற்கு இவ் இளைஞர் பாராளுமன்றத்தில் காணப்படும் செனட் சபையானது ஒரு ஆய்வுச் சபையாக இருக்குமோ என்ற கேள்வியும எல்லோர் மத்தியிலும் காணப்படுகின்றது.

*எனினும் இவ் இளைஞர் பாராளுமன்றம் தற்பொழுது இரண்டாவது கட்டத்தில் நிற்பதால் இப் பாராளுமன்றின் சேவை இலங்கைக்கு எத்தகைய பூரணத்துமானதாக இருக்கப்போகின்றதென்பது அதனது எதிர்கால வளர்ச்சிக் கட்டங்களைக் கூர்ந்து அவதானிக்கும்போதே எம்மால் அளவிட்டுக் கூறமுடியும்.*

தில்லைநாதன் பவித்ரன்
மனிதவள மற்றும் மூலதனவளப் பிரதி அமைச்சர்
இலங்கை இளைஞர் பாராளுமன்றம்




# இலங்கை வரலாற்றில் கம்பளைக் கால கலைக்கோயில் "எம்பெக்க"

இலங்கை வரலாற்றின் இதுவரை காலம் இருந்து வந்த சமஸ்கிருத, பாளி மொழிகளின் செல்வாக்கு குறைந்து சிங்கள மொழி இலக்கியங்கள் வளர்ச்சிபெற்றன. இதற்கு முக்கிய காரணம் இந்தியாவின் வட பகுதியில் முஸ்லிம் ஆதிக்கம் அதிகரித்ததால் வட மொழி செல்வாக்கிழந்தமை ஒரு புறமும் மறுபுறம் தென்னிந்தியாவில் எழுச்சி பெற்ற விஜய நகரப் பேரரசு திராவிட மொழிகளை ஊக்குவித்தமையும் இலங்கைக்கும் விஜய நகர பேரரசுக்கும் ஏற்பட்ட உறவுகளும் ஆகும்.

விஜய நகர பேரரசு வைஷ்ணவ மதத்தை ஆதரித்ததால் அதேகாலப் பகுதியில் இலங்கையிலும் விஷ்ணு (உபுல்வன் தெய்வம்) தெய்வ வழிபாடு பரவலாயிற்று. இதற்கு மற்றுமொரு காரணம் சீதாவாக்கை காலம் முதல் கம்பளை அரசு காலத்தில் அழகக்கோனார் என்ற தமிழ் கோனார்கள் அரச அதிகாரத்தில் செல்வாக்கு செலுத்தியமையும் அரசர்கள் தென்னிந்திய பாண்டிய அரச வம்சத்தில் இருந்து பட்டத்து ராணிகளை கொண்டிருந்தமையும் ஆகும்.

மறு புறத்தில் இந்தியாவில் முஸ்லிம் அரசர்களின் ஆதிக்கம் பெருகிய போது கல் தச்சர்களும் மரச் சிற்பக் கலைஞர்களும் இலங்கையில் வந்து குடியேறியுள்ளனர். இவர்களைக் கொண்டு அரசர்கள் விகாரைகள், தேவாலயங்கள் அமைத்தபோது அவற்றில் திராவிட கலை மரபுகள் பொதிந்து காணப்பட்டன. கண்டிக்கும்,



கம்பளைக்கும் நடுவில் உள்ள எம்பெக்க, லங்காதிலக்க, கடலாதெனிய ஆகிய தேவாலயங்களில் இத் திராவிட கட்டிடக்கலை மரபுகளைக் காணலாம். இவற்றில் புத்தபெருமானின் சிலையுடன், விஷ்ணு (உப்புல்வன்), விபீசனன், ஸ்கந்தகுமார (முருகன்), கணேசர் (கணபதி) ஆகியவர்களின் சிலைகளும் புறச் சுவர்களில் வைத்து நிர்மாணிக்கப்பட்டு உள்ளன. அதேபோல் தமிழ் இலக்கிய மரபுகளையொட்டி தூதுக் காவியங்கள் (சந்தேசய) பல தோன்றின. பரவிசந்தேசய (புறாவிடு தூது) அத்தகைய நூல்களில் பெயர் பெற்றது.

தேவாலயத்தின் பணி செய்பவர்களாக நியமிக்கப்பட்டுள்ள பத்து பங்குக்காரர்கள்
1. கங்காணி வீடு, 2. வீதியே வீடு, 3. முல்கம்பல வீடு, 4. கற்பலகை வீடு, 5. மனந்திவெல, 6. சியம்பலாகொட, 7. ரன்கம, 8. தும்ப[illegible] 9. [illegible]தெனிய 10. தலவத்துர [illegible] வீடுகள். இவர்கள் இணைந்து விமரிசையாக வருடாந்த பெரஹெர வைபவத்தை செய்து வருகின்றார்கள்.

## கட்டிடக்கலை மிளிரும் கலையம்சங்கள்

தேவாலயத்தின் கட்டிடத் தொகுதி எட்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றில் ரிட்டா கெதர (ஆபரணங்கள் வைக்கும் அறை) மற்றும் சிங்காசன மண்டபம் என்பன தேவாலயத்துக்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய வாகல்கட (நுழைவாயில்) மகா தேவாலயம் (கீழ் தேவாலயம்), முழுத்தென்கெய (மண்டபம்), வீ அட்டுவ (நெற்களஞ்சியம்), புதுகெய (புத்தபெருமான் கோயில்) என்பனவாகும்.

தேவாலயத்தின் கலை வேலைபாடுகள் கொண்ட சிங்காசன மண்டபம் தேவாலயத்தில் இருந்து 100 யார் தூரத்தில் நுழைவாயிலுக்கருகே காணப்படுகின்றது. சற்றே மேட்டு நிலத்தில் சிங்காசன பீடம் அமைக்கப்பட்டுள்ளது. பெரஹெர காலத்தில் தேவ ஆபரணங்கள் அதில் அலங்கரிக்கப்பட்டு மன்னன் சிங்காசனத்தில் இருந்து வீதி வலத்தை கண்டு களிப்பான் என்று சொல்லப்படுகின்றது.

தேவாலய பூமிக்குள் பிரவேசிக்கும் நுழைவாயில், வாயில்



மண்டபம் என்பது மிகுந்த கலை வேலைப்பாடுகளுடன் பொருந்திய தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. வித்தியாசமான கூரை அமைக்கப்பட்டு அவற்றுக்கு மேல் துண்டு துண்டுகளாக சிவந்த ஓடுகள் நேர்த்தியாக பொருத்தப்பட்டுள்ளன. இந்த நுழைவாயில் மண்டபத்தின் மரத் தூண்களின் இரட்டை அன்னப் பறவைகள், யானைக் குஞ்சரம், நாகணவாய்ப்பறவை, நீண்ட தந்தங்கள் கொண்ட யானை, தாய் சேய் அரவணைப்பு, வைரவர் போன்ற உருவங்கள் நுண்ணிய கலை வேலை-ப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ளன.

செந்தூரன் *(இன்னும் நடுவோம்)*

சென்ற வார இதழில் (22.06.2013) வெளியான எல்லைக்கல் கட்டுரையில்.. "3ம் விக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்-பட்டதுமான எம்பெக்க தேவாலயம் காணப்படுகின்றது" என்பதில் எம்பெக்க தேவாலயமானது 4ம் புவனேகபாகு மன்னனால் கட்டப்பட்டது என்பதே சாலப்பொருந்தும் என்பது நூலாதாரமாக குறிப்பிட முடியும்

*த. அகிலன் ஆசிரியர்
புனித மரியாள் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரசின்
# உலக வலம்

## மழைக் காடுகளுள் மாயன்களின் புதிய தடம்



மழைக்காடுகளுக்குள் மாயன்களின் அழிந்த நகரொன்றின் இடிபாடுகளை ஆராச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

மெக்சிகோவின் கிழக்குப் பகுதியிலுள்ள மழைக்காடுகளுக்குள்ளேயே இந்நகரத்தை விஞ்ஞானம் மற்றும் கலைக்கான ஸ்லோவினியக் கல்லூரியின் துணைப் பேராசிரியர் ஜவன் ஸ்பிரசக் தலைமையிலான வரலாற்று ஆராய்ச்சியாளர் குழு கண்டு பிடித்துள்ளது.

கண்டு பிடிக்கப்பட்டவற்றுள் 75 அடி உயரமான பிரமிட் ஒன்றும் காணப்படுகின்றது. அதனைத் திறந்து மரணித்த உடலின் மீது விஞ்ஞானப் பரிசோதனைகளை முன்னெடுக்கும் பட்சத்தில் சிலவேளைகளில் மாயன் இனம் அழிந்தது எவ்வாறு என்ற கேள்விக்கான விடை தெரியவரும் எனத் தெரிகின்றது.

## ஸ்னோவ்டனைக் கையளிக்கும் எண்ணம் எனக்கில்லை – புட்டின்



அமெரிக்கப் புலனாய்வு இரகசியங்களை உலகறியச் செய்த அமெரிக்கரான எட்வேட் ஸ்னோவ்டனை அமெரிக்காவிடம் கையளிக்கும் எண்ணம் தமக்கில்லை என இரஸ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் அறிவித்துள்ளார்.

ஹொங்ஹொங்கில் வைத்து புலனாய்வுத் தகவல்களை ஸ்னோவ்டன் வெளியிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து அவரைத் தம்மிடம் கையளிக்குமாறு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்திருந்தது. அவ் வேண்டுகோளின் பால் ஹொங்ஹொங் ஈர்க்கப்பட்ட போது அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படுவதை விரும்பாத ஸ்னோவ்டன் இரஸ்யாவிற்குச் சென்றிருந்தார்.

மாஸ்கோவின் விமான நிலையத்தினுள் கடந்த 23ம் திகதி தொடக்கம் இருக்கும் ஸ்னோவ்டன் அரசியல் அகதி அந்தஸ்த்துக் கோரி ஈக்குவடோர் நோக்கிப் பயனமாகலாம் எனத் தெரிகின்றது. மாஸ்கோ விமான நிலையத்திலுள்ள அவரைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா கோரியதற்கு பதிலளித்தபோதே விளாடிமிர் புட்டின் தனக்கு அவ்வாறான எண்ணம் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

## கட்சிச் செல்வாக்கை இழந்ததால் பதவியிழந்தார் ஆஸியின் பிரதமர்

ஆஸ்திரேலிய நாட்டின் ஆட்சிக் கட்டிலுள்ள தொழிற்கட்சியின் முன்னைய தலைவரே மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் தனது பிரதமர் பதவியை இழந்துள்ளார் ஆஸியின் பெண் பிரதமரான ஜுலியா கில்லார்ட்.

2010ல் கட்சித் தலைமைப் பதவியை ஜுலியாவிடம் இழந்த கெவின் றொட் மீண்டும் அப் பதவியைக் கைப்பற்றியதுடன் ஆஸியின் பிரதமராகவும் மாறியுள்ளார்.

கட்சி வாக்கெடுப்பில் தோல்வியுற்றால் தான் அரசியலிலிருந்து விலகுவதாக ஜுலியா தேர்தலுக்கு முன் தெரிவித்திருந்தார்.

அவரது ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி காணப்பட்டதுடன் குறைந்த வேலையின்மை வீதமும், குறைந்த வட்டி வீதமும் காணப்பட்டாலும் மக்கள் செல்வாக்கைப் பெற ஜுலியாவினால் முடியாமல் போயிருந்தது குறிப்பிடத் தக்கது.

## மேற்குச்சீன இன வன்முறையில் இருபத்தியேழு பேர் பலி

தூர கிழக்குச் சீனாவில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களுக்கும், சீன பௌத்தர்களுக்கும் இடையே நிகழும் இன வன்முறைகளில் தற்போதுவரை இருபத்தியேழு உயிர்கள் பலியாகியுள்ளன.

க்ஸ்ஸின்ஜியாங் மாகாணத்தில் உகிர்ஸ் இன முஸ்லிம்களுக்கும் பெரும்பான்மை ஹான் இன பௌத்தர்களுக்கும் இடையே பல காலமாக இன முரண்பாடுகள் இருந்து வருகின்றன.

அம் மாகாணக் காவல்துறை அலுவலகத்தைச் சுற்றிவளைத்து நடத்தப்பட்ட தாக்குதலின் ஆரம்பத்தில் ஒன்பது காவல்துறையினர் உட்பட பதினேழு பேர் பலியானதைத் தொடர்ந்து காவல்துறையினர் சகட்டுமேனிக்கு ஆர்ப்பாட்டக்காரரின் மீது சுடுகலப் பிரயோகத்தை மேற்கொண்டதால் மேலும் பத்துப்பேர் சம்பவ இடத்தில் பலியாகினர். காயமடைந்த பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## மாபெரும் இலவச கருத்தரங்கு – 2013

திருகோணமலை நகராட்சி மன்ற தலைவர் க. செல்வராசா அவர்களின் வழிகாட்டலில்

நகராட்சி மன்றத்தில் தரம் 10, 11 மாணவர்களுக்கு வரலாறு பாடம் தொடர்பான இலவசக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது

**காலம்:** 06.07.2013 காலை 8.00 - 12.00 தரம் 10, 11 மாணவர்களுக்கு

07.07.2013 காலை 8.00 - 12.00 தரம் 11 மாணவர்களுக்கு

**அனுமதி இலவசம்**

அகிலன்
சுடர் ஒளி வெற்றிப்படி சஞ்சிகை ஆசிரியர்
ஆறுதல் வினாப்பத்திர வள்ளளர்

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 9

பிரதீபா

1. பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
   1. வாழை ஒரு மரம். வாழை எமது நாட்டில் வளர்கின்றது.
   2. அரிசி ஒரு வகைத் தானியம். நெல்லைக் குற்றினால் அரிசி கிடைக்கும்.
   3. புடோலங்காய் ஒரு வகைக் காய்கறி. புடோலங்காய் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படுகின்றது.

2. "சுற்றாடல் விழிப்படைந்துள்ளது" என்பதன் கருத்து யாது?
   1. சுற்றாடல் எழுச்சி அடைகிறது.
   2. சுற்றாடல் ஒளிமயமாகிறது. 3. சுற்றாடல் வலிமை பெறுகிறது.

3. புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைவேன் என்று சாந்தன் கூறுகின்றான். அவன் இவ்வாறு கூறுவதற்கான காரணம் என்ன?
   1. இப்பரீட்சையில் எவரும் இலகுவாகச் சித்தியடையலாம் என்பதினாலாகும்
   2. அவன் பரீட்சைக்கு நன்கு தயாராகி இருந்ததனாலாகும்.
   3. இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை நடைபெறுவதனாலாகும்

4. நான் பல நாடுகளில் உள்ளேன். பழமரத் தோட்டத்திலும் பூஞ்சோலையிலும் காணப்படுவேன். பூக்களில் இருந்து பழங்கள் தோன்றுவதற்கு உதவுவேன். எனது வாழ்க்கைப்பருவத்தின் ஒரு கட்டத்தில் மனிதனுக்கு தீமை செய்வேன். அப்படியாயின் நான் யார்?
   1. தேனீ 2. வண்ணாத்துப்பூச்சி 3. குளவி

5. ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை, ..............................., ..............................
   1. செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை
   2. திங்கட்கிழமை, புதன்கிழமை
   3. ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை

6. கீழே தரப்பட்டுள்ள கவிதையின் நான்கு வரிகளின் சரியான ஒழுங்குமுறை யாது?

   அ. அங்கே சென்று கற்பதால் ஆ. அறிவு மேலும் வளருமே
   இ. எங்கள் பள்ளிக்கூடமே ஈ. எளிமை மிக்க நிலையமே

   1. அ, ஆ, இ, ஈ 2. ஆ., ஈ, அ, இ 3. இ, ஈ, அ, ஆ

7. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணங்களைப் பயன்படுத்தி விளையாடப்படுவது எது?



   1. ரெனிஸ்
   2. பூப்பந்து
   3. மேசைப்பந்து

8. கண்ணன் அல்லும் பகலும் இடையறாது கல்வி கற்பதனால் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றான். இச்சம்பவத்தைக் குறிப்பிடாதது எது?
   1. முயற்சி திருவினையாக்கும் 2. ஊக்கம் உயர்வைத் தரும்
   3. பலசாலியும் தோல்வி அடையலாம்

9. 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி புதன்கிழமை. 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை எனின், 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி என்ன கிழமையாகும்?
   1. வெள்ளிக்கிழமை 2. சனிக்கிழமை 3. புதன்கிழமை

10. நெல் : பிட்டு எனின், பால் : .................
   1. வெண்ணெய் 2. ஆடை 3. தயிர்

11. அசையக் கூடிய உயிருள்ள பொருள் மரம் என்பது போல அசையாத உயிருள்ள பொருள் எது?
   1. மனிதன் 2. முட்டை 3. சங்கு

12. பாதை ஒன்றை அமைப்பதற்கு 4 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை என கணக்கிடப்பட்டது. இதே வேலையை 5 மனிதர்களைப் பயன்படுத்தினால், எத்தனை நாட்களில் முடிப்பர்?
   1. 5நாட்கள் 2. 8 நாட்கள் 3. 10நாட்கள்

13. ஒரு சதுரமுகியின் ஒரு பக்க நீளம் 100செ.மீ எனில், சதுரமுகியின் ஒரு பக்கத்தின் பரப்பளவு எவ்வளவு?
   1. 800 $cm^2$ 2. 1000$cm^2$ 3. 2800$cm^2$

14. 6 எலுமிச்சம் பழங்களில் 250 மி.லீ குளிர்பானம் பெறலாம். 2 லீற்றர் குளிர்பானம் பெற எத்தனை எலுமிச்சம் பழங்கள் தேவை?
   1. 8 2. 48 3. 42

15. ரூ 47 விலையுள்ள ஒரு பயிற்சிப் புத்தகத்தையும் ரூ 12.50 விலையுள்ள பேனையையும் வாங்குவதற்கு என்னிடம் ரூ 50.00 உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்?
   1. ரூ 59.50 2. ரூ 9.50 3. ரூ 19.50

16. மாலாவின் வயது சீலாவின் வயதைவிட 3 வருடங்கள் கூடுதலாகும். சீலாவின் வயது கலாவின் வயதைவிட 4 குறைவாகும். கலாவின் வயது 20 வருடங்கள் ஆயின் மாலாவின் வயது எத்தனை வருடங்கள்?
   1. 19 2. 21 3. 24

17. செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்தைப் போன்று மும்மடங்காகும். செவ்வகத்தின் சுற்றளவுக்கு சமமான சதுரம் ஒன்று உள்ளது. செவ்வகத்தின் நீளம் 12 செ.மீ எனின், சதுரத்தின் ஒரு பக்க அளவு என்ன?
   1. 8செ.மீ 2. 12செ.மீ 3. 24செ.மீ

பெயர்: ..........................................................................
..........................................................................
முகவரி: ..........................................................................
..........................................................................
..........................................................................
பாடசாலை: ..........................................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனப்பிரச்சினையும் அரசாங்கத்தின் ஊடக ஒழுக்கக் கோவையும்

**எம்.எஸ்.எம். ஐயூப்**

அரசாங்கமானது, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்காக ஒழுக்கக் கோவையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. நாட்டில் எத்தனையோ ஒழுக்கக் கோவைகள் இருக்கும் போது அரசாங்கம் புதிதாக மற்றொரு கோவையை ஏன் முன்வைத்தது என்பது தெளிவில்லாமல் இருக்கிறது. அதேவேளை பலர் இந்த விடயத்தில் அரசாங்கத்தின் நோக்கங்களைப் பற்றி கடுஞ் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால் (Editors Guild of Sari Lanka) தயாரிக்கப்பட்டு பொதுவாக நாட்டில் ஏறத்தாழ அனைத்து சுதந்திர ஊடகவியலாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கக் கோவையொன்று இருக்கிறது. அது மட்டுமல்லாது அக்கோவையின் அமுலாக்கத்தை மேற்பார்வை செய்வதற்காக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவும் (Press Complaint Commission of Sri Lanka) இருக்கிறது.

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஒழுக்க நெறிகளை எவ்வாறு பேணுவது என்பதைப் பற்றி நாடளாவிய ரீதியல் ஊடகவியலா-ளர்களுக்காக பயிற்சி செயலமர்வு-களையும் நடத்தி வருகிறது. அதேவேளை பத்திரிகைகள் அவ் ஒழுக்கக் கோவையை மீறும் போது ஆணைக்குழு அதை பத்திரிகை ஆசிரியர்களுக்கு தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறது. பத்திரிகைகளுக்கு எதிராக தனி நபர்களோ அல்லது நிறுவனங்களோ செய்யும் முறைப்பாடுகளையும் ஆணைக்குழு விசாரித்து வருகிறது.

அதற்கு புறம்பாக சில நிறுவனங்கள் தமக்கென்றே ஒழுக்கக் கோவைகளை வைத்திருக்கின்றன. ‘ரூபவாஹினி கூட்டுத்தாபனம், நெத் எப்.எம். வானொலி நிறுவனம் மற்றும் ராவய பத்திரிகை அவ்வாறான நிறுவனங்களாகும். போதாக்குறைக்கு சர்வதேச ஊடக நிறுவனங்களின் ஒழுக்கக் கோவைகளையும் அவசியமாக இருந்தால் பின்பற்ற முடியும்.

அவையெல்லாம் இருக்கையில் அரசாங்கம் ஏன் மற்றோர் ஒழுக்கக் கோவையை தயாரிக்க வேண்டும்? அதன் வாசகங்களை ஆராயும் போது ஓரளவிற்கு அரசாங்கத்தின் நோக்கத்தை புரிந்து கொள்ளலாம். ஆனால் மேலோட்டமாக அதன் வாசகங்களைப் பார்க்கும் போது அதில் எவ்வித குறையும் இருப்பதாக தெரியவில்லை.

இவ் விடயம் ஊடக அமைப்புக்களை மட்டுமோ அல்லது எதிர்க்கட்சிகளை மட்டுமோ பாதிக்கக் கூடிய விடயம் அல்ல. 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான சர்ச்சை உச்சக் கட்டத்தை அடைந்து இருக்கும் இவ்வேளையில் அது தமிழ் ஊடகங்களையும் பாதிக்கலாம்.

இனப் பிரச்சினை விடயத்தில் அநேகமாக சிறுபான்மை மக்கள் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சித்து வரும் நிலையில் இது சிறுபான்மை நலன்களையும் பாதிக்கலாம். எனவே இது இனப்பிரச்சினையோடு சம்பந்தம் இல்லையே என்று சிறுபான்மையினர் உதாசீனமாக இருந்து விட முடியாது.

இது சிறுபான்மை மக்களை பாதிக்காத விடயமாக இருந்தாலும் பொதுவாக சமூகத்தை பாதிக்கும் சமூக, பொருளாதார பிரச்சினைகள் விடயத்தில் அம்மக்களும் கரிசனை காட்டத் தான் வேண்டும். அரசாங்கத்தின் ஊடக ஒழுக்கக் கோவையின் பிரதான பிரச்சினை என்னவென்றால் அதில் பல வாசகங்களுக்கு பல அர்த்தங்களை கொடுக்கக் கூடியதாக இருப்பதே. இதனை அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஹியூமன் ரைட்ஸ் வொச் நிறுவனமும் சுட்டிக்காட்டியுள்ளது.

''பொதுமக்களின் எதிர்ப்பார்ப்புக்கு களங்கத்தை ஏற்படுத்தல், நாட்டின் ஒழுக்க விதியை அல்லது பொதுமக்களின் ரசனை மற்றும் ஒழுக்கத்தின் தரம் தாழ்த்துதல் ஆகிய விடயங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும்'' என்பதே அக்கோவையின் முதலாவது விதியாக இருக்கிறது.

பார்த்த பார்வைக்கு இது சிறந்த வாசகமாகத் தான் தெரிகிறது. ஆனால், தேர்தலொன்றின் போது ஆளும் கட்சியொன்றுக்கு எதிராக கருத்து வெளியிடுவதையும் வேண்டும் என்றால் “பொதுமக்களின் எதிர்ப்பார்ப்புக்கு களங்கத்தை ஏற்படுத்தல்“ என்பதாக குற்றஞ்சாட்டலாம். “பொதுமக்களின் எதிர்ப்பார்ப்பு“ எது என்பதை யார் தீர்மானிப்பது என்பதே இங்குள்ள முக்கிய பிரச்சினையாகும்.

“நாட்டின் ஒழுக்க விதியை தாழ்த்துதல்'' என்றும் இங்கு குறிப்பிடப்படுகிறது. “நாட்டின் ஒழுக்க விதி“ என்பது என்ன? யார் அதனை தீர்மானிக்கப் போவது? இவை தெளிவில்லாத விடயங்களாகும். “பொதுமக்களின் ஒழுக்கத்தின் தரம்” என்றும் இதே வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. நாட்டின் ஒழுக்க விதி வேறு, பொதுமக்களின் ஒழுக்கத்தின் தரம் வேறா? யார் இதனை தீர்மானிப்பது?

இக்கோவையில் இதைவிட பாரதூரமான வாசகம் ஒன்று இருக்கிறது. அதாவது வெளிநாட்டு உறவுகளை பாதிக்கும் விமர்சனங்களை தவிர்க்க வேண்டும் என்பதே. இதன் பிரகாரம் இந்தியா - இலங்கையின் இனப் பிரச்சினையை முறையாக கையாளவில்லை என்று ஓர் எழுத்தாளர் எழுதினால், சிலவேளை அதுவும் வெளிநாட்டு உறவுகளை பாதிக்கும் விமர்சனமாக அரசாங்கம் கருதலாம்.

சில மாதங்களுக்கு முன்னர் பிரிட்டன் சில இலங்கை தமிழர்களை தனது நாட்டிலிருந்து வெளியேற்றியது. இதை விமர்சிப்பதும் வெளிநாட்டு உறவுகளை பாதிக்கும் விடயமாக எடுத்துக் கொள்ளலாம். முஸ்லிம்கள் அநேகமாக இஸ்ரேலை விமர்சித்து எழுதுவார்கள். அதையும் வெளிநாட்டு உறவுகளை பாதிக்கும் விடயமாக எடுத்துக் கொள்ளலாம்.

அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் மனித உரிமை விடயத்தில் இரட்டை வேடம் பூண்டு செயற்படுவதாக அரச ஆதரவாளர்கள் பல வேளைகளில் கூறுவார்கள். அதையும் வெளிநாட்டு உறவுகளை பாதிக்கும் விமர்சனமாக கருதலாம். ஆனால் அரசாங்க ஆதரவாளர்-களையும் குறைகூறும் அளவிற்கு அரசாங்கத்தின் அரசியல் ஒழுக்க நெறிகள் உறுதியாக இருக்குமா என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

“ஜனாதிபதி, நீதித்துறை மற்றும் தேசத்தினுடைய ஒருமைப்பாட்டை பாதிக்கும் விடயங்கள் தவிர்க்கப்பட வேண்டும்” என அரச கோவையின் தமிழ் பிரதி கூறுகிறது. ஆனால் அதே வாசகம் ''நிறைவேற்றுத் துறை, நீதித்துறை மற்றும் சட்டமியற்றும் துறை ஆகியவற்றின் மேன்மைக்கு எதிரான விடயங்களை தவிர்க்க வேண்டும்'' என்று ஆங்கில பிரதியிலும் “நிறைவேற்றுத்துறை, நீதித்துறை மற்றும் சட்டமியற்றும் துறை ஆகியவற்றின் மீது மக்களிடம் இருக்கும் கௌரவத்தை பாதிக்கும் விடயங்களை தவிர்க்க வேண்டும்” என்று சிங்கள பிரதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறைவேற்றுத்துறை, நீதித்துறை மற்றும் சட்டமியற்றும் துறை என்ற மூன்று துறையும் சேர்ந்தே “அரசு” உருவாகிறது. எனவே அம்மூன்று துறையின் மேன்மையை பாதிக்கும் விடயங்களை தவிர்க்க வேண்டும் என்றாலும் அத்துறைகள் மீது மக்களிடம் இருக்கும் கௌரவத்தை பாதிக்கும் விடயங்களை தவிர்க்க வேண்டும் என்றாலும் அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது என்ற நிலைமையே உருவாகிறது. ஏனெனில் அவ்வாறான விமர்சனத்தால் அரசின் கௌரவம் பாதிக்கப்படுகிறது என்றோ அல்லது அதன் மேன்மை பாதிக்கப்படுகிறது என்றோ வாதிட முடியும்.

பொதுமக்களை தவறாக வழிப்படுத்தும் விடயங்களை தவிர்க்க வேண்டும் என்பது மற்றொரு வாசகமாகும். குறிப்பிட்டதோர் கருத்து மக்களை தவறாக வழிப்படுத்துவதாக தீர்மானிக்கப்போவது அரசாங்கமே. எனவே ஓர் அரசாங்கம் தாம் விரும்பாத சகல கருத்துக்களையும் மக்களை தவறாக வழிப்படுத்தும் கருத்தாக கருதலாம்.

மதக்குழுக்கள் மற்றும் சமூகங்களுக்கு அவதூறு ஏற்படும் அல்லது இனவாதத்தை, மதப்பூசல்களை தூண்டும் விடயங்களை தவிர்க்க வேண்டும் என்றும் வன்முறைகளை ஊக்கப்படுத்தும் அல்லது தூண்டிவிடும் உள்ளடக்கங்கள் மற்றும் தேசியத்துக்கு எதிரான நடைமுறைகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இரண்டு வாசகங்கள் அரசாங்க கோவையில் இருக்கின்றன. இரண்டும் தற்போதைய நிலைமையில் பொருத்தமானதாகவும் பாராட்டக்-கூடியதாகவும் இருக்கின்றன.

ஆனால் “மதக்குழுக்கள் மற்றும் சமூகங்களுக்கு அவதூறு ஏற்படும் அல்லது இனவாதத்தை, மதப்பூசல்களை தூண்டும் விடயங்கள்” தொடர்பாக அசாத் சாலிக்கு எதிராக நடவடிக்கை எடுத்தவர்கள் - பொதுபல சேனா, சிஹல ராவய, ராவணா பலய போன்ற பல்வேறு குழுக்கள் தொடர்பாக அவ்வாறான முறைப்பாடுகள் இல்லை என்கிறார்கள். எனவே அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஓரிரு தினங்களுக்கு முன்னர் கூறியதைப் போல் முதலில் அரசியல்வாதிகளுக்கு ஒழுக்கக் கோவையொன்றை தயாரிக்க வேண்டும்.

ஊடகவியலாளர்களுக்கான இவ் ஒழுக்கக் கோவையை மீறுவோர் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது இன்னமும் கூறப்படவில்லை. இவை சட்டமாக்கப்படுமா என்பதும் இன்னமும் கூறப்படவில்லை.

*நன்றி.*
*தமிழ்மிரர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“செங்கம்பளம்” எனும் சஞ்சிகையிலிருந்து.. எஸ்தர் விஜித் நந்தகுமார்

## மெய்முகம்

ஆழ்ந்த உன் கூரிய
பார்வையால்
குதறப்பட்டு வெளிப்படட்டும்
என் போலி முகம்
எனைக் காலமெல்லாம்
கடந்து போனவர்களால்
ஒட்டிவிடப்பட்ட பலவிதமான
முகங்களை
குதறி கிழித்து விடு!!

சொட்டும் இரத்தம் எனதானதல்ல
என்னைக் கடந்தவர்களுடையது
சூரியனாய் எழுந்து கைகளை
அகல விரி
அகால மண்டலங்களில்
உன் கைகளால் துளாவு
தட்டுப்படும் காணாமல்
போயிருக்கும்
மெய்முகம்
அள்ளியெடுத்து புதியதாய்
பெயர் சூட்டு
அதிலே மீண்டும் கறைகள்
தெரிந்தால்
முத்தங்களால்
துடைத்தெறி!!

“இரண்டு கார்த்திகைப் பறவைகள்” எனும் நூலிலிருந்து

## சாவை நினைத்து....

நீ உடைவதில்
எனக்கு உடன்பாடில்லை !

ஏராளம் இதயங்கள்
நாளும் நாளும்
நொறுங்கிப்போகும்
நமது தேசத்தில்
உனது உடைவை நீ
நியாயப்படுத்துவதில்
நியாயமில்லை !

இது -
குற்றமே செய்யாத
சுற்றவாளிகளும்
தண்டனை வாங்கும்
தேசம் நண்பனே !

நீயும் நானும்
குண்டுகள் பாய்ந்து
ஒரு நாள் சாகலாம் !
அதற்காய் சாவை நினைத்தே
சாவது சரியா ?

இல்லை:
நீ உடைவதில்
எனக்கு
உடன்பாடில்லை

## இன்னும் மௌனமாய்

ஒரு பனியிரவில்
பாய் விரித்த சோம்பேறியாய்
நீதி !

தீவெங்கும் நட்டு
பசளையிட்டு
வளர்த்த
இனவெறிப் பற்றைகளில்
தலை மறைந்து
மனிதம் !

எந்தையரும் இணைந்து
வேய்ந்த குடிசையுள்
வேற்றானாய் எம்மை
வெருட்டுகிற சங்கதிகள் !

எல்லாம் பார்த்தும் கேட்டும்
இன்னும் இன்னும்
மௌனமாய் நாம் !

எஸ். புஷ்பானந்தன்

## 13ஐ ஒழிக்கும்..

வரப்பட்ட 13 ஆவது அரசியலமைப்புத்திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளின் அதிகாரங்களையும் வரப்பிரசாதங்களையும் கடந்த 25 ஆண்டுகளாக பெரும்பான்மையின மக்களும் அனுபவித்து வந்தனர்.

தற்போது வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்படவிருக்கும்போது 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்றும் அதிகாரங்களைக்குறைக்க வேண்டும் என்றும் பேரினவாதிகள் குரல் எழுப்புகின்றனர்.

இந்த நடவடிக்கை இனங்களுக்கு இடையேயான நல்லிணக்க முயற்சிகளுக்கு தீங்கிழைக்கும். அத்துடன் இனவிரிசலையும் ஏற்படுத்தும். எனவே சனாதிபதி உடனடியாக தலையிட்டு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியதான அதிகாரப்பரவலாக்கல் மூலம் நிலைத்து நிற்கக்கூடிய நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும்" என்றார்.

## கன்னியா வெந்நீரூற்றுக்கு..

பட்டிருப்பதாகவும், அதனை வில்கம் ரஜமகா விகாரையின் பிரதம குரு பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரியவருகிறது. இக்காணியை வழங்குவதற்கான ஆணையை மத்திய காணியாளர் நாயகம் மாகாண காணி ஆணையாளர் நாயகத்திற்கு பிறப்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## தெரிவானது விபுலானந்தா..

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. விஞ்ஞான, கணித, கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கு மேலதிகமாக தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தரக்கூடிய பாடநெறியான தொழில்நுட்ப பாடநெறியை கற்பிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் திருகோணமலையில் மட்டுமே ஒரு தமிழ்ப் பாடசாலை தெரிவாகியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் எட்டு முஸ்லிம் பாடசாலைகளும், மூன்று சிங்களப் பாடசாலைகளும் ஒரேயொரு தமிழ்ப் பாடசாலையுமே தெரிவாகியுள்ளன எனத் தெரிய வருகின்றது

## மூதூரில் கவனயீர்ப்புப் போராட்டம்

மூதூர் தள வைத்தியசாலையின் குறைகளை நிவர்த்தி செய்து தருமாறும் இதுநாள் வரையிலான அதிகாரிகளின் அசமந்தத்தனத்தைக் கண்டித்தும் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை ஏற்பாடு செய்து அழைப்பு விடுப்பதாக மூதூர் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு மக்களிடையே துண்டுப்பிரசுரமொன்றை விநியோகித்துள்ளது. அடுத்த மாதம் இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை இக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறும் என்றும் பிரதேசத்தின் இன, மத வேறுபாடுகளுக்கப்பால் எல்லோரும் ஒன்றிணைந்து இந்நாட்டு சுகாதார அதிகாரிகளுக்கு விடுக்கின்ற அறைகூவலாக இது அமையவேண்டும் என்பதால் அனைவரையும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு கோரிக்கைகளை வென்றெடுத்து மூதூர் தள வைத்தியசாலையின் குறைகளை நிவர்த்திக்க அணிதிரளுமாறு அத்துண்டுப்பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிழக்கு மாகாண முதலமைச்சர்..

முன்தினம் அலரிமாளிகைக்கு அழைத்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண அமைச்சர்கள் ஆளுனருடன் முரண்பட்டுக்கொண்டும், ஆளும் தரப்பு உறுப்பினர்கள் முதலமைச்சருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்திக்கொண்டு சபை அமர்வு பகிஸ்கரிப்பிலும் ஈடுபட்டு வரும் சூழ்நிலையிலேயே மேற்படி ஜனாதிபதி அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போதைய ஆளுனரும், முதலமைச்சரும் தான் தொடர்ந்து இருப்பார்கள். அதில் மாற்றம் ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு கிடையாது. ஆளுனர் மற்றும் முதலமைச்சருடன் முரண்பாட்டை தோற்றுவிக்கும் பிண்ணனியில் உள்ளவர்களை நான் அறிவேன். அவர்களின் எண்ணம் ஒரு போதும் பலிக்காது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதே வேளை விமலவீர திஸாநாயக்க வீணான முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றார். ஆளுனர் முதலமைச்சர் மாறாவிட்டாலும் கல்வியமைச்சை வேறொருவருக்கு வழங்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி கடும் தொனியில் குறிப்பிட்டார்.

இதேவேளை கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்காவையும் விசேடமாக அழைத்து எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

## இந்தோனேசிய முதலீட்டாளர்கள் கிழக்கு மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு ஆர்வம்!

இந்தோனேசிய முதலீட்டாளர்கள் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு விருப்பத்துடன் உள்ளனர் என இலங்கையிலுள்ள இந்தோனேசியா தூதுவராலயத்தின் முதலாவது செயலாளர் அல்பட் அப்டி தெரிவித்தார். (25.6.2013) மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளன பிரதி நிதிகளை மட்டக்களப்பிலுள்ள அதன் அலுவலகத்தில் வைத்து சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தோனேசியா தூதுவராலயத்தின் முதலாவது செயலாளர் அல்பட் அப்டி நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்து மட்டக்களப்பிலுள்ள மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளன பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

## மகாதிவுல்வெவ வைத்தியசாலைக்கு மருத்துவ வண்டி கையளிப்பு

திருகோணமலை மாவட்ட மஹாதிவுல்வெவ கிராமிய வைத்தியசாலைக்கு எண்பது லட்சம் பெறுமதியான மருத்துவ வண்டியொன்று வழங்கிவைக்கப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்கிழமை இவ் வண்டியை இந்தியன் எண்ணைக் கம்பனி (ஐ.ஓ.சி) வழங்கியிருந்தது.



## காற்றாடி விடும் நிகழ்வு

ஆனைச்சேனை கிராம அபிவிருத்திச் சங்க பாலர் பாடசாலையினால் அண்மையில் 21.06.2013ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் "தன்னாலும் முடியும் என தன்நம்பிக்கையை வளர்க்கும் நோக்கில்" இக் காற்றாடி விடும் நிகழ்வு நடைபெற்றது.

(ஜவாஹிர்)



## தெரிவுக்குழுவில் மு.காவைத் தூக்கியெறிந்தது அரசு

அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பான விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைக்கும் முயற்சியிலுள்ள அரசு அதற்காக முன்மொழிந்த 19 அங்கத்தவர்களில் முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவர்கள் எவரையும் உள்ளடக்கவில்லை. அரச பங்காளிக் கட்சிகளின் அங்கத்தவர்களைக் கொண்டு உருவாக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இக் குழுவிற்கு அரச பங்காளிக் கட்சியான மு.கா சேர்க்கப்படாததையிட்டு அதன் தலைவர் கடும் கடுப்பிலுள்ளார். மு.கா இல்லாத தெரிவுக்குழு குப்பையில் போடப்பட வேண்டியது எனத் தெரிவித்த அவர், சனநாயகத்தைப் படுகுழியில் வீழ்த்தும் முடிவு இது எனத் தெரிவித்துள்ளார்.

## புலி ஆதரவாளர் மைதானத்துள் – விளக்கம் கேட்கிறது இலங்கை

மினி உலகக் கோப்பைப் போட்டிகளின் போது அரையிறுதிப் போட்டிகளில் இந்திய இலங்கை அணிகள் மோதிய போட்டியின் போது புலி ஆதரவாளர்கள் இடையூறு விளைவித்தமையைத் தடுக்க முடியாமற் போனதற்கான காரணத்தை விளக்குமாறு இலங்கை இங்கிலாந்து அரசைக் கேட்டுள்ளது. இங்கிலாந்தின் வெளிவிவகார அமைச்சிடமே இவ்விளக்கம் கோரப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## "நமது கிராமங்களை நாமே பாதுகாப்போம்" கந்தளாயில் செயலமர்வு!

ஆசியா மன்றத்தின் அனுசரனையில் கிராமிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் கந்தளாய் தலைமைப் பொலிஸ் - சமூக பொலிஸ் பிரிவின் பங்கேற்புடன் சிவில் பாதுகாப்பு குழுக்களின் நிர்வாக பிரதிநிதிகளுக்கான "நமது கிராமங்களை நாமே பாதுகாப்போம்" எனும் தொனியில் விசேட செயலமர்வொன்று சமீபத்தில் கந்தளாய் தலைமை பொலிஸ் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கந்தளாய் தலைமைக் காவல்துறை நிலையத்தின் பொறுப்பதிகாரி திரு. நிமல் பண்டார அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கந்தளாய் பிராந்திய காவல்துறை அதிகாரி திரு. நுவான் அத்துக்கோரல (SP) அவர்களும் விசேட அதிதியாக கந்தளாய் சமூக காவல்துறை பிரிவின் பொறுப்பதிகாரி திரு.பண்டிதரத்ன அவர்களும் மற்றும் இன்னும் பல அரச உத்தியோகத்தர்களும், காவல்துறை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். சிவில் பாதுகாப்பு குழுக்களின் தலைமைப் பிரதிநிதிகள் சுமார் 150க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கிராம பிரிவிலுள்ள மூன்று சமூகங்களையும் சேர்ந்த பலர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

கிராமங்களில் அன்றாடம் நடைபெறும் குற்றச்செயல்கள், அடிப்படைப் பிரச்சனைகள், தேவைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அல் அக்ஷா கல்லூரியின் 85வது ஆண்டு விழா

கிண்ணியா அல் அக்ஷா கல்லூரியின் 85வது ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. ஜுலை 3, 4, 5ம் திகதிகளில் நடைபெறவுள்ள இந் நிறைவு விழாவில் பிரதான நிகழ்வுகளாக வரலாற்று மலர் வெளியீடு, சாதனையாளர் கௌரவிப்பு, கலாசார விழா, தொழில் நுட்ப ஆய்வுகூட மற்றும் பள்ளிவாசல் திறப்பு விழா, பொருட்காட்சி என்பன நிகழவுள்ளது. மூதூர் தடயம் அரும்பொருள் காட்சியகத்தின் வரலாற்றுப் பொருட்களும் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஜவாஹிர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்துகொள்ளுங்கள்

### புவி

**வடிவம்**

உட்கிரகங்களின் அளவு ஒப்பீடு (இடமிருந்து வலமாக): புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய்




புவியின் உருவம் துருவங்களில் தட்டையாகவும் நிலநடுக் கோட்டிற்கு அருகில் விரிவடைந்தும் உள்ள நீள்வட்ட கோளத்தைப் போல் காணப்படுகின்றது. புவியின் சுழற்சியால் இந்த இடை விரிவாக்கம் ஏற்பட்டுள்ளது, மேலும் விட்டங்களை ஒப்பிடுகையில் நிலநடுக்கோடு துருவங்களை விட 43 கிமீ அதிகமாயுள்ளது. இக் கோளத்தின் சராசரி விட்டம் 12,742 கிமீ அதாவது 40,000 கிமீ/π, ஏனென்றால் மீட்டரை முதலில் வரையறுக்கும் போது அது பூமத்திய ரேகையிலிருந்து வட துருவத்திற்கு பிரான்ஸில் உள்ள பாரிஸ் நகர வழியாக கணக்கிடும் தூரத்தில் 1/10,000,000 ஈடாக கொள்ளப்பட்டது.

புவி அதன் இடவமைப்பான (Topography) சிறு மேடு பள்ளங்களை வைத்து காணும் போது கோள வடிவிலிருந்து புவி மாறுபடும் ஆனால் மொத்தத்தில் இந்த வேறுபாடு மிகவும் சிறியது. உண்மையான கோளத்தோடு ஒப்பிடுகையில் புவி 584 அல்லது 0.17 சதவீதம் விலகியுள்ளது, இது பில்லியர்ட்ஸ் விளையாட்டில் பயன்படுத்தப்படும் பில்லியர்ட் பந்திற்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய 0.22 சதவீத மாற்றத்தை விட சிறியதே. புவியின் மேற்பரப்பில் மிக அதிகமாக கோள வடிவிலிருந்து விலகியுள்ள இரு இடங்கள் எவரஸ்ட் சிகரம் (கடல் மட்டத்திலிருந்து 8,848 உயரம்) மற்றும் மரியானா ட்ரென்ச் (கடல் மட்டத்திலிருந்து 10,911 மீ கீழுள்ளது). புவி, நிலநடுக்கோட்டருகே விரிந்திருப்பதால் பூமியின் நடுவிலிருந்து மிகவும் தள்ளி உள்ள இடம் நில நடுக்கோட்டருகே உள்ள ஈக்வெடார் நாட்டின் (Ecuador) சிம்போராசோ சிகரமாகும்.

**புவியின் இரசாயன சேர்மானம்**

பூமியின் நிறை ஏறக்குறைய 5.981024 கி.கி. ஆகும். பூமி, இரும்பு (32.1%), ஆக்சிஜன் (30.1%), சிலிக்கன் (15.1%), மெக்னீயம் (13.9%), சல்பர் (2.9%), நிக்கல் (1.8%), கால்சியம் (1.5%), மற்றும் அலுமினியம் (1.4%) மீதமுள்ள 1.2% மிகவும் குறைந்த அளவிலுள்ள தனிமங்களால் ஆனது. நிறை பிரிவினால் புவியின் உட்கரு பிரதானமாக இரும்பினாலும் (88.8%) சிறிதளவு நிக்கல் (5.8%) மற்றும் சல்பர் (4.5%) ஆகியவற்றாலும், மேலும் ஒரு விழுக்காடு அரிதான தனிமங்களாலும் ஆகியுள்ளது.

*(தொடரும்.)*

## உயிர் காத்த உதவி [உண்மைக் கதை]

பாகிஸ்தான் அரசாங்கம் 3 மில்லியன் ரூபா செலவில் 150 இலங்கை மாணவ, மாணவியருக்கு சாதாரண, உயர்தர கல்வியை 2013 ஜின்னா புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கான நிகழ்வில் உரை நிகழ்த்திய கல்வி அமைச்சின் இணைப்பு பாராளுமன்ற உறுப்பினரான மொகேன் லால் கிரேரோ ஒரு மனதை உருக்கும் உண்மைக் கதையை கூறினார்.

இந்த நிகழ்வு கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் குவாஸிம் குரைஷியின் தலைமையில் ஆனந்தா கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மொகேன் லால் கிரேரோ அவர்கள் இந்தக் கதையை உணர்ச்சி பூர்வமாக கூறினார்.

பல வருடங்களுக்கு முன்னர் இந்த நிகழ்வு லண்டனில் நடைபெற்றது.

இலங்கையில் இருந்து உயர்கல்வி பெறுவதற்கு லண்டன் சென்றிருந்த ஒரு மாணவன் அன்றைய காலகட்டத்தில் பணம் செலுத்தி கல்வி கற்க வேண்டியிருந்தமையால் சிறு தொழில்களை செய்து தனது கல்விக்கான செலவை ஈடு செய்து வந்தான்.

ஒரு நாள் அவனிடம் உணவுக்காக பணம் எதுவும் இருக்கவில்லை. அதனால், பசியில் வேதனைப்பட்ட அந்த மாணவன், ஒரு வீட்டின் கதவைத்தட்டியிருக்கிறான்.

வீட்டு எஜமானி கதவைத் திறந்த போது, அம்மா எனக்கு தாகமாக இருக்கிறது ஒரு கிளாஸ் தண்ணீர் தாருங்கள் என்று கேட்டிருக்கிறான்.

அந்த மாணவனை ஏற, இறங்கப் பார்த்த அந்தப் பெண்மணி, வீட்டுக்குள் சென்று ஒரு பெரிய கிளாஸ் நிறைய பசும்பாலை கொண்டுவந்து கொடுத்து இதைக் குடியென்று கூறியிருக்கிறார்.

மாணவனும் அந்தப் பெண்மணிக்கு நன்றி தெரிவித்து விட்டு சென்றுவிட்டான்.

பலவருடங்களுக்கு பின்னர் அந்த பெண்மணி நோய்வாய்ப்பட்டிருந்ததனால் ஒரு பாரிய சத்திரசிகிச்சையை செய்ய வேண்டியிருந்தது.

அதற்கான பணத்தை திரட்டுவதாயின் அந்தப் பெண் அவ்வீட்டையே விற்க வேண்டிய கஷ்ட நிலையில் இருந்தார்.

ஆனாலும் வேறு வழியின்றி அந்தப் பெண் ஆஸ்பத்திரியில் சேர்ந்து சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக செய்து குணமானால் தன்னுடைய வைத்திய செலவை சமாளிப்பதற்கு வீட்டை விற்க வேண்டுமென்று நினைத்து கொண்டிருந்த போது, அந்தப் பெண்ணிடம் ஒரு வைத்தியத் தாதி வைத்திய செலவுக்கான ஒரு காகிதத்தை அவளிடம் ஒப்படைத்து விட்டு சென்றாள்.

அந்தக் காகிதத்தை வாசித்த அந்தப் பெண் உண்மையிலேயே மனம் மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் விட்டார். அம்மா, அன்று நான் பசியோடு இருந்த போது நீங்கள் கொடுத்த ஒரு கிளாஸ் பால் என்னை வாழவைத்தது வைத்தியத்துறையில் உயர்பதவி வகிப்பதற்கு உதவியது.

நீங்கள் இந்த சத்திரசிகிச்சைக்கான கட்டணத்தை எனக்கு அன்று கொடுத்த ஒரு கிளாஸ் பால் மூலம் செலுத்திவிட்டீர்கள் என்று எழுதப்பட்டிருந்தது. என்று கூறி திரு கிரேரோ தனது கதையை முடித்துக் கொண்டார்.

இவ்விதம் தான் நாம் பணத்தை சிக்கனமாக வைத்து கல்விகற்று எங்களுக்கும், மனித குலத்திற்கும் உதவி செய்ய வேண்டுமென்று அவர் அங்கு புலமைப்பரிசில் பெற்ற மாணவ, மாணவியருக்கு வேண்டுகோள் விடுத்து விடைபெற்றார்.




## பெண் விடுதலை பற்றி பாரதியார்!

(தொடர்ச்சி)

இந்துக் கலாசாரத்தைக் காக்க வேண்டிய கடமையைப் பாரதி நம் நாட்டுப் பெண்களிடம் ஒப்படைக்கிறார். பிறகு அவர்கள் எப்படி விடுதலையடைய முடியும்? மாதராகிய என் அன்புக்குரிய சகோதரிகளே! இத்தனைப் பழமையும், மேன்மையுஞ் சான்ற இரண்டு பகுதிகளின் கலப்பாகுந் தன்மையால் பாரத தேசத்திலேயே மற்றப் பிரதேசங்களிலுள்ள நாகரிகத்தைக் காட்டிலும் கூட ஒருவாறு சிறப்புடையதாகக் கருதுவதற்குரிய ஆரிய, திராவிட நாகரிகம் உங்களுடைய பாதுகாப்பிலிருக்கிறது. இதனை மென்மேலும் போதித்து வளர்க்கும் கடமை உங்களைச் சார்ந்தது.

தமிழர் நாகரிகம் அல்லது திராவிடர் நாகரிகம் உயர்ந்த நாகரிகம் என்று கூற மனமில்லாமல் ஆரிய, திராவிட நாகரிகம் உங்கள் பாதுகாப்பில் உள்ளது என்கிறார். முன்பு ஆரியர்-திராவிடர் என்பதே பொய் என்று கூறியவர் இப்போது அதை எற்றுக் கொள்கிறார்.

பாரதியின் கதைகளில் கூடப் பெண்களுக்கு விடுதலை அளிப்பதாக இல்லை.

ஏழைப் பெற்றோர் வசதியின்மை காரணமாக ஒரு முதிய பிராமணனுக்குத் தம் மகளை மணம் முடித்து வைக்கின்றனர். முதிய வயதான கணவன் இருக்கும் போதே, கந்தாமணி என்ற அந்த பிராமணப் பெண் வேறு ஒரு கணவனைத் தேடிக் கொண்டு அவனுடன் வாழ்வதை பாரதியாரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே அவளைக் கிறிஸ்துவ மதத்திற்கு மாற்றி விடுகிறார் என்று பாரதியின் கதைமகளிரின் பாத்திரங்களை ஆய்வு செய்த வ.உமாராணி கூறுகிறார்.

பாரதி இறுதிக் காலத்தில் எழுதிய கதையாகிய "சந்திரிகையின் கதை" யில் வரும் விசாலாட்சி என்பவள் ஒரு இளம் விதவை. அவள் மறுமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறாள். அவ்வாறே மறுமணம் செய்து கொள்கிறாள். அவள் கணவன் பெயர் விசுவநாத சர்மா. திருமணமாகி ஒன்றரை ஆண்டுகளில் அவனுக்கு பைத்தியம் பிடித்து விடுகிறது. இருந்த போதிலும் அவள் கணவனுக்கு பணிவிடை செய்து வருகிறாள். இதைத் தெய்வீகக் காதல் என்கிறார் பாரதியார்.

இதில் என்ன தெய்வீகத் தன்மை இருக்கிறது?

அந்தக் காலத்திலேயே பாரதி இவ்வளவு முற்போக்காகப் பெண் விடுதலையைப் போற்றி இருக்கிறாரே என்று காட்டுபவர்கள் அவருடைய தொடக்க காலக் கட்டுரைகளையே காட்டுகின்றனர். அவருடைய பிற்கால எழுத்துகள் என்பவை முழுக்க முழுக்க மதம் சார்ந்தவை. எனவே அதில் பெண்கள் விடுதலை குறித்துச் சிறப்பாகக் கூறுவதற்கு ஒன்றும் இல்லை என்றே சொல்லலாம்.

*(கீற்று)* *(தொடரும்)*

## கலாமின் பொன் மொழிகள்

- **கனவு காணுங்கள், திட்டமிடுங்கள், செயற்படுங்கள்.**
- **கனவு காண்பவர்கள் அனைவரும் தோற்பதில்லை, கனவு மட்டுமே காண்பவர்கள்தான் தோற்கிறார்கள்.**
- **சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை. துன்பங்களை சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.**
- **உன் கை ரேகையை பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே! ஏனென்றால் கையே இல்லாதவனுக்கு கூட எதிர்காலம் உண்டு.**
- **ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல உன்னைப் போல சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே**
- **நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் நமது இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.**

ஐ.எப். ஷிப்னா, தரம் - 07
தி/ அந்-நஹார் மகளிர் மகாவித்தியாலயம்.

## அக்கரைச்சேனையில் சிறுவர் சந்தை

*(ஜவாஹிர்)*

மூதூர் அல்-முபஸ்ஸிரா சமூக அபிவிருத்தி மையத்தின் கல்விக்குழுவினர் அக்கரைச்சேனையில் சிறுவர் சந்தை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அந்நிகழ்வில் மாணவர்கள் மிக சுறுசுறுப்பாக ஈடுபடுவதை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## the SUNDAY TIMES

### தூதுவர்களினூடாக இராசதந்திரப் போரில் இறங்கியுள்ள இலங்கையும் கனடாவும்

இலங்கையும் கனடாவும் தூதுவர்களின் நியமனத்தில் தம்மிடையே இராசதந்திரப் போரில் ஈடுபடுவதாக தெரியவருகின்றது. அண்மையில் கனடாவுக்கான தூதுவராக எசல வீரக்கோன் நியமிக்கப்பட்டதை கனேடிய விவகார அமைச்சு தற்போது வரை அங்கீகரிக்கவில்லை. இந்நியமனத்தை கனேடிய அரசு ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது, இலங்கைக்கான புதிய கனேடிய தூதுவரை இலங்கை ஏற்றுக்கொள்கின்றதா என்பதினடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும் என தகவல்கள் சில தெரிவிக்கின்றன. இலங்கைக்கான கனேடிய தூதுவராக ஷெல்லி வைடிங் அறிவிக்கப்பட்டுள்ளார். கனேடிய வெளிவிவகார அமைச்சின் தகவல்களின் படி கனேடிய தூதுவர் தற்போது வரை தனது நியமனப் பொறுப்புக்களை இலங்கையில் ஏற்றுக்கொள்ள இடமளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது. மூன்று மாதத்திற்கு முன் இலங்கைக்கு அவர் வருகை தந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இராசதந்திரிகளை நியமிப்பதற்கு முன் நாடொன்றினால் முன்மொழியப்படுபவரை மற்றைய நாடு எற்றுக்கொள்ள வேண்டும். அதன்பின் தூதுவர் தனக்குரிய நாட்டில் பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். கனேடிய தூதுவராக பணியாற்றிய சித்திராங்கனி வாகீஸ்வராவுக்குப் பதிலாக வீரக்கோனை நியமிப்பது என்ற இலங்கையின் முன்மொழிவு 3 மாதங்களுக்கு முன்பு கனடாவுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக தெரியவருகின்றது.

### வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்தவராகும் தயா மாஸ்டர்

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள வட மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்துள்ள 53 போட்டியாளர்களுள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தயா மாஸ்டரும் அடங்குவதாக தெரியவருகின்றது. இவர்களுள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் யாழ் மாநகர சபை அங்கத்தவர் றெமடியஸ் முதியப்புவும் சாவகச்சேரி பிரதேச சபையின் ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்தவர் குமார் சர்வேந்திரனும் வர்த்தகர் சதாசிவம் இராமநாதன் யாழ் மீனவ சமாச உதவித்தலைவர் பொன்னம்பலம் ஆகியோரும் அடங்குவதாக தெரிகிறது.

### கைது செய்யப்பட்ட காவல்துறை மாஅதிபர் சொகுசு அறையில்

தடுப்பிலுள்ள கொலைக்குற்றம் சுமத்தப்பட்ட காவல்துறை மா அதிபர் வாஸ் குணவர்த்தன சொகுசு அறையொன்றில் தடுப்பிலிருக்கின்றார். இவ்வறை சிறைச்சாலை அலுவலர்களின் ஓய்வறையாக இருப்பதுடன் இணைந்த கழிவறையையும் கொண்டுள்ளது. இவ்வறையில் 8 சிறைச்சாலை அலுவலர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் 7 கட்டில்கள் அகற்றப்பட்டு பரந்த வசதியுடைய அறையாக உருவாக்கப்பட்டே காவல்துறை மா அதிபரின் தடுப்பறையாக மாற்றப்பட்டுள்ளது.

### வாடகைக் கார்களைக் களவெடுத்தவர் கைது

வாடகைக்குக் கார்களை வாங்கி வணிகம் செய்யும் போது களவுபோனதாக குறிப்பிட்டு அச்சொகுசு வாகனங்களை குறைந்த விலைக்கு விற்ற நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மௌன்டலவேனியா காவல்துறையினரால் இந்நபர் கைது செய்யப்பட்ட பின்னரே தகவல்கள் வெளிவரத் தொடங்குகின்றன. இரத்மலான பிரதேசத்திலுள்ள வட்டிக்கு பணம் வழங்கும் ஒருவரின் வீட்டில் மூன்று வாகனங்கள் இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து காவல் துறையினரை விசாரணைக்கு உட்படுத்தினர். அப்போது தன்னிடம் 11 லட்சம் ரூபாய்களை வட்டிக்குப் பெற்றுக்கொண்டு அதற்குப் பொறுப்பாக இம் மூன்று வாகனங்களையும் நபரொருவர் கொடுத்துவிட்டுச் சென்றதாக அவர் தெரிவித்தார். அவ்வாறு வாகனங்களை விட்டுச் சென்ற நபரைக் கைது செய்யப்பட்ட போதே விவரங்கள் வெளிவரத் தொடங்கின. சூதாட்டத்தில் ஈடுபடும் இந்நபர் உரிமையாளர்களிடம் வாடகைக்கு வாகனங்களைப் பெற்றுக்கொண்டு எந்த வாகனத்தை வட்டிக்காரர்களிடம் விட்டு 5 லட்சம் ரூபா வரை பணத்தைப் பெற்றுக்கொண்டு அதனை சூதாட்டத்தில் ஈடுபடுத்தியிருக்கின்றார். சுமார் 1.5 வருடங்கள் இவ்வாறு நடைபெற்றுள்ளதாகவும் சுமார் 15 வாகனங்கள் உரிமையாளர்களிடமிருந்து களவாடப்பட்டுள்ளதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

### இனங்களிடையே சமத்துவமும் நல்லிணக்கமுமே பாராளுமன்ற தெரிவுக் குழுவின் இலக்கு – அமைச்சர் டியு குணசேகர

புதிதாக தேர்வு செய்யப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவின் இலக்கு யாதெனில் இனங்களுக்கிடையே சமத்துவத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதே என அமைச்சர் டியு குணசேகர தெரிவித்தார். ஒன்றிணைந்த இலங்கையில் இனப்பிரச்சனைகளுக்கான தீர்வொன்றினைக் காண்பதற்கான 60 வீதமான அரசியலாளர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வொன்றை வடிவமைப்பதே இக்குழுவின் நோக்கமென அவர் தெரிவித்தார். எஞ்சிய 40 வீதத்தை பின்-னொரு காலத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். ஒன்று அல்லது பல காரணங்களால் சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை அனைத்து அரச தலைவர்களும் எடுத்திருந்தாலும் கூட அவை சாத்தியப்படாமலே போயிருக்கின்றன என கூறிய அவர் இப்பாராளுமன்ற தெரிவுக் குழு மத்திய அரசிற்கும் மாநில அரசிற்குமிடையே ஒற்றுமையின்மையை உண்டாக்கும் விடயங்களை விடுத்து 13வது திருத்தத்தை எவ்வாறு அமுலாக்கும் என்பதையும் ஆராயும் என்றும் தெரிவித்தார்.

### அதிகாரப் பகிர்வு பற்றி ஆழமாகப் பேசுவோம் – பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர்

தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவானது மாகாண சபையின் காணி, காவல்துறை அதிகாரங்கள் தொடர்பாக பரந்த கலந்துரையாடலை மேற்கொள்ளவிருப்பதாக அமைச்சர் நிமால் சிறி பாலடி சில்வா தெரிவித்துள்ளார். அதிகாரப் பகிர்வு சரியென ஒரு தரப்பினரும் பிழையென மறு தரப்பினரும் கூறும் இவ்வேளையில் இலங்கையின் சுதந்திரக் கட்சியானது இவ்விடயத்தில் நடுநிலையாகவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

### ரயில் பாதையில் பார ஊர்தி

பதுளைக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் பாதையில் உள்ள பொதுக்கடவை ஒன்றில் சீமெந்தை ஏற்றி வந்த பார ஊர்தி ஒன்று உடைந்து வீழ்ந்ததால் ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. பல மணி நேரங்களின் பின்னரே ரயில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியதாக தெரிய வருகின்றது. சுமார் 17 தொன் சீமெந்தினை ஏற்றிவந்த பார ஊர்தியே இவ்வாறு தொடரூந்து பயணத்தை தடைசெய்திருந்தது.

### நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பாராளுமன்ற தெரிவுக் குழுவே நிறைவேற்ற வேண்டும்

நல்லிணக்க ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றும் பொறுப்பினை பாராளுமன்ற தெரிவுக் குழுவே கொண்டுள்ளது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். தேசிய மொழிகளை அமுல்படுத்தும் நடவடிக்கை கூட இலங்கையை ஒற்றுமைப்பட வைக்கும் ஒரு சக்தியென அமைச்சர் தெரிவித்தார். ஒரு மாகாண சபை மற்றொரு மாகாண சபையுடன் இணைவதை தாமே தீர்மானிக்க முடியாது என கொண்டுவரப்படவுள்ள 13வது திருத்தத்தின் மீதான திருத்தத்தை தாம் ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## The Sunday LEADER

### ஐக்கிய இராச்சியம் அறிவுறுத்தப்பட்டிருந்தது

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நடைபெற்று முடிந்த மட்டைப் பந்து சம்பியன் சிப் போட்டியிற்கு இரு நாட்களுக்கு முன்னராகவே பிரித்தானியா அரசாங்கத்தையும் ஸ்கொட்லான்ட் யாட் காவல்துறையினரையும் போட்டியின் போது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் பாதுகாப்பற்ற நிலை உருவாகும் என இலங்கை அரசு எச்சரித்திருந்தது தற்போது தெரியவந்துள்ளது. தற்போது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை ஐக்கிய இராச்சிய காவல்துறையினரால் தடுக்கமுடியாது போயுள்ளதற்கான காரணங்களை அறிக்கையிடுமாறு இலங்கை, ஐக்கிய இராச்சியத்திடம் கேட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார். இலங்கைக்கு எதிரான சுலோகங்களையும் புலிகளின் கொடிகளையும் ஏந்தியவாறு இரு தடவைகள் மைதானத்துள் நுழைந்தது குறிப்பிடத்தக்கது. அதன் பின் போட்டிகள் முடிவடைந்த பின் இலங்கை துடுப்பாட்ட அணியினர் பயணித்த பேருந்தை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் தடுத்து வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. சில போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டிருந்தாலும் இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு போதுமான பாதுகாப்பு வழங்கப்பட்டதா என்பதே எமது கரிசனையாகவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் நியமித்த குழுவினர் அறிக்கையிட்டுள்ளனர்

அண்மையில் கடல் சீற்றத்தால் மரணித்த 55 மீன்பிடியாளர்களின் மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவென அனர்த்த முகாமைத்துவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையானது இம் மரணங்களுக்கு வானிலை அவதான நிலையமோ அல்லது அனர்த்த முகாமைத்துவ அமைச்சோ காரணமல்ல என தெரிவித்துள்ளது. இம்மரணங்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பொறுப்பற்ற செயல்களே காரணமென குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டன. சும்மா இருப்பவர்கள் உடனடியாக எங்களைக் குற்றஞ்சாட்டினாலும் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் படி தாங்கள் குற்றமற்றவர்கள் என தெளிவாகத் தெரிகின்றன என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### இறைச்சிக் கடையை நாங்கள் எரிக்கவில்லை – சிங்கள ராவய

தங்காலையில் முஸ்லீம் ஒருவருக்குச் சொந்தமான இறைச்சிக் கடையினை தாங்கள் பற்றவைக்கவில்லை என சிங்கள ராவய அமைப்பு தெரிவித்துள்ளது. பசுவதைக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை கடந்த வாரம் கதிர்காமத்திலிருந்து கொழும்பு நோக்கி நடாத்தி முடித்திருந்தது. சிங்கள ராவய. ஆர்ப்பாட்டத்தின் போது முஸ்லீம் ஒருவருக்குச் சொந்தமான மாட்டிறைச்சிக்கடை எரியூட்டப்பட்டது. ஆரம்ப கட்ட விசாரணைகளின் போதும் இவ்வமைப்பினரே இவ் எரியூட்டலுக்குப் பொறுப்பானவரென தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அவ்வமைப்பினருக்கும் இச்சம்பவத்திற்கும் எவ்வித தொடர்புமில்லையென அவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சென்னையிலிருந்து இலங்கை இராணுவம் வீடு திரும்பியது

தமிழ் நாட்டில் விசேட பயிற்சி பெற்றுவரும் இலங்கை இராணுவ அதிகாரிகள் இருவரையும் நாட்டுக்கு திருப்பியழைப்பது என இலங்கை முடிவெடுத்துள்ளது. தமிழ்நாட்டரசின் அழுத்தங்கள் அதிகரிக்கத் தொடங்கிய பின்னரே இம்முடிவு எய்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பயிற்சி பெற்றுவரும் ஏனைய பல இலங்கை இராணுவ அலுவலர்கள் இந்தியாவின் வேறு மாநிலங்களுக்கு பயிற்சிகளைப் பெறுவதற்கு பிரித்தனுப்பப்பட்ட போதும் இவர்கள் இருவருக்குமான பயிற்சி வேறு மாநிலங்களில் இல்லாததால் இலங்கைக்கே திருப்பியழைப்பதற்கு முடிவெடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முரசின் விளையாட்டு செய்திகள்

## வெள்ளி விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்

(ஜவாஹிர்)

திருகோணமலை, மூதூர் அல் மனார் வித்தியாலயத்தின் வெள்ளி விழா நிகழ்வினை எதிர்வரும் தை மாதம் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பாடசாலை அபிவிருத்திக்குழுவால் ஏற்பாடு செய்யப்படும்.

மேற்படி விழாவின் பொருட்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருவதுடன் மிதி வண்டியோட்டம், வீதியோட்டம், படகோட்டம், நீச்சல் ஆகிய போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன. மேலும் வெள்ளி விழா மலர் வெளியீடும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 15 வயதுக்குட்பட்டோருக்கான மட்டைப்பந்தாட்டப் போட்டியில் கோணேஸ்வரா அணியினர் பலம்

கடந்த 27.06.2013 வியாழக்கிழமையன்று திருமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும், வித்தியாலோக ராஜகீய தேசிய பாடசாலைக்குமிடையிலான 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான 50 பந்து பரிமாற்றப் போட்டியானது இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜகீய முதலில் துடுப்பெடுத்தாட இணக்கம் தெரிவித்தது. இவர்கள் 136 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கோணேஸ்வரா அணியினர் 18.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மட்டுமே இழந்த நிலையில் வெற்றி இலக்கான 137 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைக் கைப்பற்றினர். இதில் பூ. டினுர்ஷன் 33 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 55 ஓட்டங்களை குவித்து அணியின் ஓட்டத்தை பலப்படுத்தினார்.



(சசிகுமார்)

உத்தரகாண்ட் வெள்ளத்தின் மீட்புப் படையணியுடன் செயலாற்றிய ஹர்பஜன்.



VBC aat SRI LANKA Association of Accounting Technicians of Sri Lanka

STUDENT REGISTRATION NOW ON
for 2014 JANUARY EXAMINATION

வகுப்புகள் ஆரம்பம்
2013 ஜுலை மாதம் 13ம் திகதி
சனிக்கிழமை காலை 9.00 மணி

aat SRI LANKA நிறுவனத்தினால் திருகோணமலையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே கல்லூரி

(aat மாணவர் பதிவுப் புத்தகத்தின் 26வது பக்கத்தைப் பார்க்க - VIHE)

Veal Business College
No. 159A Sea View Road, Trincomalee 777 555 738

## ஒரு கொலையின் கதை

9 (மாயன்)

மெதுவாகப் பின்புறமாகத் தடவும் போது பின்காற்சட்டைப் பைக்குள் இருந்து அவனது காசுப்பேழை வெளியே வருகின்றது. உள்ளிருந்து அடையாள அட்டை.........

இப்போது அவன் அணிந்திருந்த உடைகளிலிருந்து அவனது உடமைகள் யாவும் வெளியே எடுத்து வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றையும் மிகக் கவனமாக பொலித்தீன் பைகளுக்குள் அந்தக் காவலர் சேகரித்து அடையாளமிட்டுக் கொண்டார்.

அக் காவலர் தனது உதவியாளரை அழைத்து சில தகவல்களை தனது நாட்குறிப்பில் பதியுமாறு கேட்டுக்கொள்கின்றார்.

அப் பதிவில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது " கூர்மையான ஆறுதம் ஒன்றே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அக் கூர்மையான ஆயுதத்தினால் அந்த இளைஞனின் உடல் வெட்டப்பட்டிருக்கின்றது. அந்த இளைஞன் பாலையூற்றில் "...................." விலாசத்தில் வசித்து வந்த "...............கேதீஸ்......" என அடையாளம் காணப்பட்டுள்ளான். அவன் தனது மனைவியின் வீட்டிற்கு வந்து விட்டுத் திரும்பிச் செல்லும் போது 9 மணிக்குப் பின்னர் கொல்லப்பட்டிருக்கின்றான். மனைவியின் வீட்டில் சுமார் 8.45 மணிக்கு இரவுணவை உண்டுள்ளான். அவ் வீட்டிலிருந்து சுமார் 75 மீற்றர் தூரமளவில் அவன் கொல்லப்பட்டுள்ளான். அக் கூரிய ஆயுதத்தால் அவன் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள வெட்டுக்களில் இரண்டு மிகக் கடுமையானவையாகத் தெரிகின்றன. வெட்டொன்று கழுத்தைப் பிளந்துள்ளது. இரண்டாவது வெட்டு வலது கன்னத் தாடையைப் பிளந்து சென்றுள்ளது.........." இவ்வாறு அவர் சொல்லச் சொல்ல அவரது உதவியாளன் மிகச் சரியாகத் தனது குறிப்பேட்டில் பதிவுகளைச் செய்து கொண்டிருந்தான்.

தடயவியல் நிபுணர்கள் அருகில் தமது பணிகளை முடுக்கிவிட்டிருந்தனர். கையடையாளங்களைத் தேடிக் கொண்டிருந்த அவர்களின் புலனாய்வுக் கண்களுக்கு கீழே விழுந்து கிடந்த கேதீஸின் மோட்டார் சைக்கிளின் பின் பார்வைக் கண்ணாடிகளின் வலது பக்கக் கண்ணாடி தனது கைபிடியில் ஒரு அடையாளத்தை வைத்திருந்தது.

கொலைஞர்களுள் ஒருவன் கேதீஸ் மோட்டார் சைக்கிளில் வந்த போது அவனை நிறுத்தி தான் காவல்துறையைச் சேர்ந்தவன் என வெளிக்காட்டியிருந்தான். அதன் போதான உரையாடலில் தனது கையை பின் பார்வைக் கண்ணாடியில் பிடித்திருந்தான்.

அக் கையடையாளம் தடவியலாளரின் கண்களுக்குள் அகப்பட்டுக் கொண்டது. அவர் அந்த கண்ணாடியை முழுவதுமாகக் கழற்றி பொலித்தீன் பையிலிட்டுக் கொண்டார்.

விழுந்து கிடந்த மோட்டார் சைக்கிளின் அருகில் வந்த அவர் மோட்டார் சைக்கிளை முழுவதுமாக ஆராய்ந்து முடித்து விட்டுத் திரும்பிய போது முக்கியமான மற்றொன்று அவரது கண்களுக்குத் தட்டுப்பட்டது.

அது கிழிந்த கறுப்பு நிற கையுறை ஒன்றின் பகுதி....

கொலைஞர்களில் இருவரும் கடுமையாக கேதீசுடன் போராடியிருந்தனர். அப்போராட்டத்தின் காரணமாகவே சில முக்கிய தடயங்களை அவர்கள் அந்த இடத்திலேயே விட்டுச் சென்றிருந்தனர். அத்துடன் கொலை செய்ய அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் இருள் சூழ்ந்த இடமாக இருந்தது. அதனை அவர்கள் தேர்ந்தெடுத்தமைக்குப் பிரதான காரணமே தம்மை யாரும் அடையாளம் காணக் கூடாது என்பதாலேயே. ஆனால் அந்த இருள் அவர்களுக்கும் துரோகம் செய்யும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

வெளிச்சம் இருந்திருந்தால் கொலையின் பின் கொலைஞர்கள் தாம் சார்ந்த தடயங்களை முழுவதுமாக அழித்து விட்டுச் சென்றிருப்பதற்கு வாய்ப்பிருந்திருக்கும். ஆனால் அந்த இருளில் அவர்களை மற்றவர்களுக்கு தெரியாமல் போனது போல் அவர்கள் விட்டுவிட்டுச் சென்றவைகள் எவையென அவர்களுக்கும் தெரியாமற் போய் விட்டது.



கேதீசுடன் நடந்த இழுபறியில் கொலைஞன் ஒருவன் அணிந்திருந்த கையுறையின் துண்டொன்று கிழிந்து நிலத்தில் விழுந்து கிடந்தது.

மிகவும் மொத்தமான அக் கையுறை எவ்வாறு கிழிந்திருக்கலாம் ......?

கொலை நடந்த போது கேதீசின் உறுமல் சத்தம் கேட்டதாகவே எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. அவ்வாறாயின் ஒரு கொலைஞன் கேதீஸின் வாயை தனது கையொன்றினால் மூட எத்தனித்திருக்கலாம். அவ்வாறு மூடியிருந்தாலும் கேதீஸின் குரல் சில வேளைகளில் வெளியே ஒரு உறுமலாகவே கேட்டிருக்கும். அப்போது கேதீஸ் தனது வாயால் அந்தக் கையைக் கடித்திருந்தால் கையுறை கிழிந்து போக வாய்ப்பிருந்திருக்கும்.

அந்தக் கையுறையை புலனாய்வாளர் சேகரித்துக் கொண்டார்.

இப்போது கேதீஸின் ஆடைகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்த நிபுணத்துவம் பெற்ற அந்தக் காவலர் கேதீஸின் ஆடைகள் தழுவாத உடலை மெதுவாகப் பரிசோதிக்கத் தொடங்குகின்றார்.... அங்குதான் இக் கொலைக்கான முக்கிய தடயமொன்றை கேதீஸ் வைத்துக் கொண்டிருக்கின்றான் என்பதை அவர் முதலில் அறியவில்லை.

(தொடரும்)

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ வினியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town
இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் 29.06.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org